# இரகுவமிச சரிதாமிர்தம்

# RAGHUVAMSA CHARITHAMIRTHAM

BY

**A. KUMARASWAMY PULAVAR**

EDITED WITH NOTES

BY

K. AMBALAVANA PILLAI

CHUNNAKAM

**THANA LUCKUMY BOOK DEPOT**

**1948** ***Price 75 cts.***

# இரகுவமிச சரிதாமிர்தம்

இது
யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்
ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்
எழுதியது

கு. அம்பலவாணபிள்ளை அவர்களால்
எழுதப்பட்ட
அரும்பதவுரையுடன்

சுன்னுகம்
தனலக்குமி புத்தகசாலையாரால்
வெளியிடப்பட்டது

1948 விலை சதம் 75

| | |
|---|---|
| First Edition | January 1930 |
| Second Edition | April 1934 |
| Third Edition | January 1939 |
| Fourth Edition | February 1948 |

( *Copyright* )

PRINTED AT THE
THIRUMAKAL PRESS
CHUNNAKAM

# FOREWORD

Kaliadasa is known to the general reader by his plays Sakuntala and Vikramorvasi; but he was a poet as well as a dramatist. Two of the best Sanskrit epics are from his pen—the RAGUVAMSA and the KUMARASAMBHAVA. The RAGUVAMSA deals with the inexhaustible story of Rama and of his ancestors. This beautiful poem has a Tamil rendering by Arasakesari, a nephew of Pararajasekhara, King of Jaffna. Every Jaffna Tamil ought to be proud of his literary achievement and ought to be familiar with its contents. But unfortunately like so many other works in Tamil, this is also in poetry and the average reader may not possess sufficient knowledge to understand Tamil classics. It is a sad fact that Tamil still suffers from a lack of really good books in prose. So we are indebted to the late lamented Sri-la-Sri A. Kumaraswamippulavar of Chunnakam for a prose version of RAGHUVAMSA. The author had a good knowledge of Sanskrit and had read the poem in the original. As to his learning in Tamil he was one of the very few Jaffna Pundits whose works were known to and appreciated by the great scholars in South India.

I have read through this book carefully and I can recommend it wholeheartedly.

The book is suitable to be used as a text-book in schools. In fact it is far superior to many of the text-books now in use in schools.

Colombo
January, 1930

**FRANCIS KINGSBURY**
LECTURER IN TAMIL
UNIVERSITY COLLEGE

உ
சிவமயம்

# முகவுரை

நூல்கள் செய்யுளானும் ஆக்கப்படும்; உரையானும் ஆக்கப்படும். உரை—வசனம். கற்றோரருகிய இக்காலத்திலே உரையான் ஆக்கப்படும் நூல்களே அதிகம் பயன்றரும். அந்நூல்களுள்ளும் அதிகம் பயன்றருவன வழுக்களின்றி எளிதான நடையிலே அழகும் சுவையுமுற ஆக்கப்படுவனவே. அவ்வாறு ஆக்கப்பட்டதே இரகுவமிச சரிதாமிர்தமெனப் பெயரிய இந்நூலாகும்.

இந்நூலை ஆக்கினோர், சுன்னாகம், வித்துவசிரோமணி ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்களே. அவர்கள் உரைநூலை அழகுற ஆக்குவதில் அதி சமர்த்தர் என்பது, அவர்களெழுதிய சிசுபாலசரித முதலிய உரை நூல்களைப் படித்தவர்கட்கு நன்கு புலப்படுமாதலின், அதனை யாம் மீண்டும் ஒருகால் ஈண்டுக் கூறுதல் மிகையேயாகும். இந்நூல் வடமொழி இரகுவமிசத்தையும் தென்மொழி இரகுவமிசத்தையும் முதனூல்களாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றது. இதன்கண் தென்மொழி இரகுவம்சச் செய்யுட்கள் சில இடையிடையே மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருத்தலால், இது, படிப்போர்க்கு உரைநூற் பயிற்சியோடு செய்யுட் பயிற்சியையும் உண்டாக்க வல்லதாகி மிகுந்த பயனுடைத்தாய் மிளிர்கின்றது. புலவரவர்கள் தாமெழுதிய இதனை வெளிப்படுத்த முன்னமே தேகவியோகமடைந்தார்க

ளாதலின், இதுகாறும் இது வெளிவராதாயிற்று. இப்பொழுது இதனை, அவர் சிரேட்ட குமாரரான ஸ்ரீ அம்பலவாணபிள்ளை அவர்கள் பதிப்பித்துத் தமிழகம் இதன் பயனை நுகருமாறு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அன்றியும், படிப்போர் எளிதுணருமாறு, இதன்கண் ஆங்காங்குவரும் கடின பதங்களுக்குப் பொருள் எழுதிப் பதிப்பித்து இதனோடு சேர்த்துமிருக்கின்றார்கள். வழுவும் கெடுதியுமமைந்துள்ள கதை (Novels) நூல்களைப் படித்து உலகங் கெடுகின்ற இக்காலத்திலே இத்தகைய உரைநூல்கள் வெளிவருவது எத்துணைப் பயனுடைத்தென்பது அறிஞர்க்கே தெரியும். ஆதலின், இதனை எழுதி உதவிய புலவரவர்களுக்கும், வெளியிட்டுதவிய அவர் குமாரரவர்கட்கும் தமிழுலகம் என்றும் கடமைப்படற்குரியதேயாம்.

**வித்தியாதரிசிகள்** இந்நூலை நோக்கி இதனைத் தகுந்ததொரு வகுப்பிற்குப் பாடபுத்தகமாக நியமிப்பாராயின், அவ்வகுப்பு மாணவர்கள், இதனைப் படித்துப், பழைய சரித்திர அறிவுடையராவதுமன்றிக், காலத்தில் இது போன்ற உரைநூல்களை எழுதுவதிலும் வல்லவராவர் என்பது திண்ணம். அன்றியும் உரைநூல்களெழுதுவோரும் தமக்கு வரும் பயனோக்கி உரை நூல்களை மேலும் மேலும் எழுதுவதில் அதி ஊக்கமுடையவராவர் என்பதுந் திண்ணமாம். இவற்றானே தமிழ்மொழியும் வளர்ச்சியடையும். ஆதலால், வித்தியாதரிசிகள் இதனைச் சிந்தித்து இந் நூலைத் தகுந்ததொரு வகுப்பிற்குப் பாடமாக நியமித்துத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவி செய்வது நன்றாம்.

இங்ஙனம்
**சி. கணேசையர்**

# உபநியாசம்

இரகுவமிச சரிதாமிர்தம் என்பது இரகு மஹாராஜாவின் மரபிற்பிறந்த அரசர் சரிதமாகிய அமிர்தமென விரித்துக் கூறப்படும். இரகு என்பவன் திலீபன் என்பவனுக்குப் புதல்வனாய்த் தன்மரபிலே பின்வருவோரெல்லாம் தன் பெயரோடு விளங்குந் தத்திதப் பெயர்கொண்டு விளங்க நின்ற தனிமுதல்வன். இரகு என்பது கலைக்கடலையும் பகைக்கடலையுங் கடக்கவல்லவன் என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். இலக்—கடத்தல். உ—ஒரு பெயர் விகுதி. லகரம் ஒற்றுமைபற்றி ரகரமாய் இரகு என நின்றது.

தெட்டமெய்த் தவப்பயச் செல்வற் கவ்வயின்
மட்டில கலைக்கட றனையும் வாளமர்
முட்டிய பகையையு முடிவு காண்பனென்
றிட்டன ரொருபெய ரிரகு வென்னவே. —இரகுவமிசம்

வமிசம்—மரபு. சரிதம்—கதை. சரிதாமிர்தம்—சரிதமாகிய அமிர்தம். அமிர்தம்போன்று இனிமைபயத்தலாற் சரிதத்தை அமிர்தம் என்றும். இரகுவை வான்மீகிராமாயணம் ககுத்தன் மகன் என்று கூறும். இந்த வான்மீகி ராமாயணமும் பிறவும் இரகுவின் மரபிலே வருவோரை இராகவர் என்னும் தத்திதப் பெயராலே வழங்குதலும் அறிக. இராகவர்—இரகுவின் மரபிலே பிறந்தோர்.

இரகுவின் மரபிலே பிறந்த அரசர் சரிதங்களைக் காளிதாச மஹாகவி ஒரு காவியமாக அமைத்துப் பாடியிருக்கிறார். அதன் பெயர் இரகுவமிசம். அந்த இரகுவமிசம் தமிழ் மொழியிலும் பெயர்த்துக் காவிய நடையமையப் பாடப்பட்டிருக்கிறது. அதனைப் பாடினோர் யாழ்ப்பாணத்திலே அரசராய் இருந்த பரராசசேகர மஹாராசாவின் மருகர் அரசகேசரி என்பவர்.

இரகுவமிசத்திலே திலீப மஹாராசன் புத்திரப்பேறின்றிக் குலகுருவாகிய வசிட்டமுனிவர் கூறியபடி காமதேனுவை வழிபட்டு இரகு என்னும் புத்திரனைப் பெற்றுக்கொண்ட கதையும், இரகு என்பவன் யாகக் குதிரை

யைக் காவல்புரிகையிலே வந்து கவர்ந்த இந்திரனோடும் போராடி வென்ற கதையும், திக்குகளை வென்று பொருளீட்டி விச்சுவசித்து என்னும் யாகஞ்செய்த கதையும், கௌற்ச முனிவர்க்குப் பதினாலுகோடி பொன்கொடுத்த கதையும், அவன் மகன் அயன் என்பவன் விதர்ப்பதேச ராசன் புதல்வி இந்துமதி என்பவளைச் சுயம்வரசபையிற் போய் வரிக்கப்பெற்று மணம்புணர்ந்த கதையும், அயன் மகனாகிய தசரதன் காட்டிற்போய் வேட்டையாடி முனிபுதல்வன் ஒருவனைக் கொன்று சாபம்பெற்ற கதையும், தசரதன் மகனாகிய இராமபிரான் விசுவாமித்திரரோடு சென்று தாடகையைக் கொன்ற கதையும், அகலிகை சாபந்தீர்த்தகதையும், சீதையை விவாகஞ்செய்தகதையும், இராவணனைக்கொன்ற கதையும், குகன்கதையும் பிறவும் சுருக்கமும் பெருக்கமுமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இக்கதைகள் கற்கிபுராணம், கூர்மபுராணம் முதலிய புராணங்களிலுங் கூறப்பட்டிருக்கின்றன. இந்த இரகுவமிச சரிதத்தை வடமொழியிரகுவமிசம் நோக்கியுந், தென்மொழியிரகுவமிசம் நோக்கியும், சில சருக்கங்களுக்குச் சுன்னாகம் ஸ்ரீமான் அ. நாகநாதபண்டிதர் செய்து வைதத மொழிபெயர்ப்பு நோக்கியும் வாக்கியவடிவமாய் ஆக்கிமுடித்தேம். இவ்வாக்கிய வடிவத்திலே சில விடயங்கள் மாற்றப்பட்டும், சில பிறநூல் நோக்கிக் கூட்டப்பட்டும் இருக்கின்றன.

படிப்போர்க்குப் பயன்படும்படி வாக்கியவடிவமான பல புத்தகங்கள் எழுதவேண்டுமென எனக்குச் சொன்ன உபாத்தியாயர்களும், மாணவர்களும், அத்தியக்ஷகர்களும், பரீக்ஷகர்களும், பண்டிதர்களும், மற்றையோரும் இதனை முற்றநோக்கி, இயைபுடையதாயிற் கொள்ளக்கடவர். இயைபில்லாதாயின் தள்ளக்கடவர். தாம் இதன்பாற் கண்ட குறைகளையும் எடுத்துச் சொல்லக்கடவர். அஃது அரும்பயன் ஆயும் அறிவினோர்க்குப் பெரும்பயன் விளைக்கும். நமக்குந் திருத்தம் சித்திக்கும்.

சுன்னாகம்,
தன்மதிஞூ மாசிமீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| க. | திலீபன் வரலாறு ... | 1 |
| உ. | நந்தினியை வழிபடுதல் ... | 3 |
| ந. | நந்தினி திலீபனுக்கு வரங்கொடுத்தல் | 7 |
| ச. | இரகுவுற்பத்தியும் யாகஞ்செய்தலும்... | 12 |
| ரு. | திக்குவிஜயஞ் செய்தல் ... | 15 |
| சு. | கௌற்சமுனிவர் பொருள்வேண்டல் | 17 |
| எ. | மாலையீடு ... | 19 |
| அ. | கடிமணஞ் செய்தல் ... | 25 |
| கூ. | தசரதனுற்பத்தி ... | 28 |
| க0. | தசரதன் அரசு புரிதல் ... | 32 |
| கக. | புதல்வரைப் பெறுதல் ... | 36 |
| கஉ. | வேள்வி காத்தலும் விவாகஞ் செய்தலும் | 39 |
| கந. | இராமபிரான் வனவாசம் ... | 45 |
| கச. | அனுமான் தூதும் இராவண சங்காரமும் | 48 |
| கரு. | அயோத்திக்கு மீளலும் அரசு புரிதலும் | 49 |
| கசு. | யாகம் செய்தலும் சுவர்க்கம் புகுதலும் | 54 |
| கஎ. | குசன் அயோத்தியை அரசு புரிதல் ... | 58 |
| கஅ. | அதிதி அரசியலும் வமிசமுறையும் | 61 |
| | அருஞ்சொற் பொருள் ... | 69 |
| | வமிச ஆவலி ... | 74 |

# இரகுவமிச சரிதாமிர்தம்

## க. திலீபன் வரலாறு

ஆதியிலே விவச்சுவான் என்னும் ஆதித்தனுடைய புத்திரனும், அரசர்க்கரசனுமாகிய வைவச்சுதன் என்னும் மனு ஒருவன் இருந்தான். அவன் மரபிலே திலீபன் என்னும் அரசன் பாற்கடலிற் சந்திரன் வந்து தோன்றுவதுபோல வந்து தோன்றினான். அவன் பிராணிகள் எல்லாவற்றினும் மிக்க பெரும் பெலமுடையவன்; மாமரம்போன்ற உன்னதபுருடன்; விசாலமான மார்புடையவன்; எருத்தின் கழுத்தினைப் போன்ற கழுத்துடையவன்; சாத்திரவுணர்ச்சியிலுஞ், சாத்திரவுணர்ச்சிக்குத் தக்கபடி ஒழுகுதலினும், முயன்ற காரியத்தை முடித்தலினும் மிக்கவன்; பகைவராயினும் நல்லோரை நட்போடும் கொள்ளுவன். உறவராயினுந் தீயோரை உவர்ப்போடுந் தள்ளுவன். இவனுக்கு மகதராசன் புத்திரி சுதக்கிணை என்பவள் பத்தினியாய் வைகினள்.

**திலீபன் வசிட்டமுனிவரைச் சேருதல்**

இந்தப் பத்தினியிடத்திலே புத்திரோற்பத்தி இல்லாமையைத் திலீபன் எண்ணிப் பெருந்துயர் கொண்டு வருந்தி இராச்சியபாரத்தை மந்திரிமாரிடத்திலே வைத்துவிட்டுக் குலகுருவாகிய வசிட்ட முனிவரை அடைந்து அருந்ததியோடும் அவருடைய பாதங்களை வணங்கினான். வசிட்டமுனிவர் ஆசீர்வாதஞ் செய்து விருந்தோம்பிக்

குசலமும் வினவினர். திலீபன் விடைகூறியபின் முனிவரை நோக்கிச் சொல்லுவான். "சுவாமி! உமது மகிமையினாலே எனக்கு வரும் இடையூறுகளெல்லாம் நீங்குகின்றன. உமது மந்திரவலியாலே எனது பகை யெல்லாம் பறக்கின்றன. மனிதராலேவரும் களவு முத லிய பயமுமில்லை. தேவராலேவரும் பஞ்சம் முதலிய பயமுமில்லை. ஓமகுண்டத்திலே நீர்சொரிந்த நெய் தானே மழையாகிப் பயிரை வளர்க்கின்றது. உமது வேதாத்தியயனப் பெருமையாலே ஈதிவாதையும் கவலையும் இல்லாமற் சனங்களெல்லாஞ் சீவித்திருக்கின் றனர்.

திலீபன் குறைகூறல்

"இவ்வாறெல்லா மிருந்தும் என்னை! எனக்கோ புத்திரரில்லை. எனக்குப் புத்திரரின்மையாலே இப்பூமி யும் என்னை இகழ்கின்றது. எனக்குப் பின்னே பிதிருக்குப் பிண்டங் கொடுப் பவரில்லை. என்பிதிரர் நான் கொடுக்கும் பிண்டத்தையும் நன்றாய் உண்கின்றிலர். நான் கொடுக்கும் தருப்பணநீரையும் இனிக் கொடுப்பவ ரில்லையே என்று விடுகின்ற பெருமூச்சினாலே அதிகஞ் சூடாக்கி அருந்துவர். தவமுந் தானமும்போல மறு மைச்சுகம் மாத்திரங் கொடாமல் இம்மைச் சுகம் மறு மைச் சுகம் என்னும் இரண்டையும் ஒருங்கு கொடுக் கும் புத்திரப்பேறில்லாத என்னை, உமக்கு முன்னே நிற்கும் காயா மரம்போலக் கண்டுகொள்ளும். இந்தப் பிதிரர் கடனினின்றும் எப்படியும் என்னை நீக்கிவிடும். இக்குவாகுவின் குலத்தவர்க்கு அரும் பேறுகளையும் பெறும்படி அருள்புரிபவர் யாவர்? குலகுருவாகிய நீரே யன்றோ!" என்றான்.

இதனைக்கேட்ட வசிட்டமுனிவர் சிறிதுபோது தியானசமாதியிலிருந்து அரசனுக்குப் புத்திரரில்லாத அந்தக்காரணத்தை நன்கு அறிந்து

**திலீபனுக்குச் சாபம் வருதல்**

சொல்லுவார்: "அரசனே! நீ முன் ஒருநாள் தேவுலகம்போய் இந்திரனைக் கண்டு திரும்பி வரும் வழியிலே கற்பக மரநிழலிலே காமதேனு படுத்திருந்தது. நீ அதனை வந்தனை செய்யாமல் மனைவியின் இருதுகாலத்தையும் புத்திரோற்பத்தியையும் நினைவிற் கொண்டு விரைவில் வந்தாய். அந்தக் காமதேனு கோபங் கொண்டு "சந்ததி கருதி என்னை வந்தனைசெய்யாமல் இகழ்ந்து செல்கின்றாய். அரசனே! என்னுடைய சந்ததியை வந்தனைசெய்யாமல் உனக்குச் சந்ததிகிடையாது" என்று சாபஞ் சொல்லிற்று. அந்தச் சாபமும் திக்கியானை கலக்கி விளையாடுந் தேவகங்கையிலே மிக்கெழும் ஆரவாரத்தினாலே உனக்கும் கேட்டிலது. உன் தேர்ப் பாகனுக்குங் கேட்டிலது. வந்தனை செய்யவேண்டிய ஒன்றை வந்தனைசெய்யாமல் வாளாபோதல் நிந்தனையாகி நன்மையைத் தடைசெய்து கெடுக்கும்.

---

## உ. நந்தினியை வழிபடுதல்

"அந்தக் காமதேனுவும் இப்போது இங்கே இல்லை பாதாளத்திலே வருண பகவானுடைய தீர்க்க சந்திரயாகத்திலே அவிப்பாகம் பெறும்பொருட்டு அங்கே போய் நிற்கின்றது. இங்கே அதன் கன்று நிற்கின்றது. நந்தினி யென்பது அதன் நாமதேயம். அந்த நந்தினியைப் பரிசுத்தம் பூண்டு பத்தியோடும் வழிபாடுசெய். உனது வழிபாட்டிலே தனது மனம் மகிழும்போது புத்

திரப்பேற்றையும் உனக்கு உளதாகச்செய்யும்" என்று சொன்னார். சொல்லும்போது நந்தினி என்னும் பெயருடைய அந்தக் கன்றும் வந்தது. அதனை நோக்கிப் பின்னும் முனிவர் சொல்லுவார். "நந்தினியென்னும் நாமத்தை நாம் கூறியபோதே நந்தினியும் வந்தது; நல்ல சகுனம். இச்சகுனம் உனது காரியம் எளிதின் முடியும் என்பதை இனிது குறிக்கின்றது.

நந்தினியை வழிபடும் முறை

"அரசனே! நீ பரிசுத்தனாய் இலை, கனி, காய் முதலிய வனபதார்த்தங்களை உண்டு விரதம் பூண்டு இந்த நந்தினியை வழிபாடுசெய். இந்த நந்தினி விடியற்காலத்திலே மேய்தற்குக் காட்டுக்குப் போகும்போது நீயும் போகவேண்டும். இது நின்றால் நீயும் நிற்கவேண்டும். கிடந்தால் நீயுங் கிடக்கவேண்டும். நீர் குடித்தால் நீயுங் குடிக்கலாம். உனது பத்தினியும் விடியற்காலத்திலே பரிசுத்தமுடையவளாய் இதனை வழிபாடுசெய்து ஆச்சிரம வெல்லை வரையும் கூட்டிக்கொண்டுபோய் காட்டிலே மேயவிடவேண்டும். சாயங்காலத்திலே மேய்ந்து திரும்பி வரும்போது உன் மனைவி ஆச்சிரமவெல்லைவரையிற் போய்நின்று வழிபாடு செய்து கூட்டிவரல்வேண்டும். இந்த நந்தினி கிருபை செய்யும்வரையும் இப்படியே வழிபாடு செய்க. எந்தத் தீங்குகளும் உனக்கு இல்லனவாகுக. புத்திரோற்பத்தியுஞ் சித்தியாகுக" என்று வாழ்த்துரை கூறி, பத்தினியையும் அரசனையும் பன்னசாலையில் விட்டு இலை கனி, காய் முதலியவைகளையும் கொடுத்தார். அவர்களும் அவைகளை உண்டு, தருப்பையாலான படுக்கையிலே படுத்திருந்து, விடியற்காலத்திலே நிகழ்ந்த வேதாத்தியயன சத்தத்தினால் விழித்தெழுந்தார்கள்.

விடியற்காலத்திலே பத்தினிசெய்த வழிபாட்டினை யும் பரிவுடனேற்றுக் கன்றுக்கும் பால் கொடுத்துவிட்டு நின்ற நந்தினியை அரசன் அவிழ்த்து விட்டான். அதுவுங் காடு நோக்கி மேயப்போயிற்று. அரசனும் பரிவார சனங்களை அங்கே நிறுத்திவிட்டு வில்லினை எடுத்துக்கொண்டு அதனைப் பாதுகாத்துச் சென்றான். பத்தினியும் ஆச்சிரம பரியந்தம் அதனைக் கூட்டிப்போய் வழிபாடுசெய்து திரும்பினாள். புல்லுக் கவளத்தை நீட்டியும், ஈக்களை ஓட்டியும், இடையூறுகளைப் போக்கியும் அது செல்லும்போது சென்றும், நிற்கும்போது நின்றும், கிடக்கும்போது கிடந்தும், நீர்குடிக்கும்போது நீர்குடித்தும், அதன் நிழல்போல அரசனும் ஒழுகினான். அரசன் சென்ற அக்காட்டிலே மழையின்றியுங் காட்டழல் தணிந்தது. பூக்களும் கனிகளும் பொலிந்து விளங்கின. எளிய பிராணிகளை வலிய பிராணிகள் வருத்துதலும் தவிர்ந்தன.

நந்தினி மேயப்போதல்

காட்டிலே புல்லை மேய்ந்துகொண்டு நின்ற நந்தினி மாலைக்காலம் வந்தவுடனே வசிட்டருடைய ஆச்சிரமம் நோக்கி வந்தது. அரசனும் பாதுகாத்து அருகில் வந்தான். பத்தினியும் ஆச்சிரம வெல்லையிற் போய் அதனை வழிபாடு செய்து கூட்டிவந்தாள். அதுவும் அவ்வழிபாட்டை அங்கீகரித்துக்கொண்டு யாக சாலையை அடைந்து நின்றது. அவர்கள் அதனை விட்டுப் போய் வசிட்டரையும் அருந்ததியையும் வணங்கினர். பால் கறந்தபின் நந்தினியும் படுத்து நித்திரை செய்தது. அரசன் பன்னசாலையிற் போய் நித்திய கருமம் முடித்துக் கொண்டு நந்தினியின் பக்கத்திற் சென்று நித்திரை

நந்தினி திரும்பிவருதல்

செய்தான். பத்தினியும் விளக்கேற்றிவிட்டு அரசன் அருகிற்போய் நித்திரை செய்தாள். பின்னர் விடியற் காலமும் வந்தது. நந்தினியும் எழுந்தது. அவர்களும் எழுந்தார்கள். எழுந்து முதனுளேபோல நந்தினியை ஒவ்வொருநாளும் வழிபாடுசெய்து வருகையிலே இருபத்திரண்டு நாட்கள் சென்றன.

இருபத்திரண்டாம் நாள் அந்த நந்தினி அரசனுடைய அன்பைப் பரிசோதனைசெய்யக் கருதி இமயமலைச்சாரலை அடைந்து அங்குள்ள இளம் புற்களை மேய்ந்து மேய்ந்து மெல்ல மெல்லச் சென்று ஒரு குகைக்குள்ளே புகுந்தது. இந்த நந்தினியை எந்தப் பிராணிகளும் இடையூறு செய்யமாட்டா என்னுந் துணிவினுலே அதன்மேல் வைத்த பார்வையை அரசன் திருப்பி இமயமலையின் சிறப்புக்களை எல்லாம் பார்த்தான். அச் சிறப்புக்களும் அரசனுடைய கண்களுக்கு ஆனந்தமாய் இருந்தன.

**இமயக்குகையில் புகுதல்**

வெருப்பிடித் தாறுறு வண்ண மிக்கவான்
உருப்பிடித் தயல்செலா வொருவன் பார்வையை
விருப்பிடித் ததனிடை விடாதிவ் வெற்பிடைத்
திருப்பிடித் தொருகணஞ் சிறைசெய் திட்டதே.
—இரகுவமிசம்.

அந்தச் சமையத்திலே அங்கிருந்த சிங்கம் ஒன்று கதுமெனப் பாய்ந்து நந்தினியைப் பிடித்தது. நந்தினியும் கூழறுதல் செய்து கீழே வீழ்ந்தது. அதனை நோக்கி அரசன் திகைத்தான். அவனுடைய இடக்கை வில்லோடும் முன்னே சென்றது. வலக்கை பின்னுள்ள அம்புக் கூட்டிற்சென்றது. இடக்கை யானசெய்

**நந்தினியைச் சிங்கம் பிடித்தல்**

யும்? வலக்கை அம்புக் கூட்டிற் சென்றபடியே தம்பிக்கப் பட்டது. அரசன் ஒரு செயலுஞ் செய்ய இயலாமல் திகைப்படைந்து சித்திரம்போல் நின்றான். சிங்கம் அரசனைப் பார்த்துச் சில வார்த்தைகள் சொல்லுகின்றது.

---

## ௩. நந்தினி திலீபனுக்கு வரங்கொடுத்தல்

**திலீபனுக்குச் சிங்கமுரைத்தல்**

"அரசனே! உனது பிரயாசம் போதும். நீ ஒருபோது அம்பினை எடுத்துப் பிரயோகித்தாலும் வம்பாய் முடிவதன்றி எனக்கு இடையூறு செய்யமாட்டாது. வலிய சரீரமுடைய ஒரு தெய்வம் வந்து என்னோடு போராடினாலும் ஒன்றுஞ் செய்யமாட்டாது. வெற்றி என்னைச் சாரும். தோல்வி அதனைச் சாரும். மரங்களை அடித்து வேரோடு பிடுங்கும் வாயுவின் வேகம் மலையை யாது செய்யும்! நான் சிங்கமல்லேன். சிவபிரானுக்குச் சேவைசெய்யும் கும்போதரன் என்னும் நாமமுடைய பூதத்தலைவன் என்று அறிந்துகொள். இங்கே நிற்குந் தேவதாரு மரத்தைப் பார். இது நீர்வார்த்து உமாதேவியார் தம் பிள்ளை போல வளர்த்தது. இதனைக் காட்டுயானைகள் வந்து சொறி தேய்த்துத் தோலையுரித்துக் காயப்படுத்தியதை உமாதேவியார் கண்டு கவலைகொண்டார். அக் கவலையை அகற்றக் கருதிய சிவபிரான் என்னை நோக்கி நீ சிங்க வடிவமாய் இங்கே நின்று எதிரேவரும் பிராணிகளையும் உணவாக உண்டுகொண்டு நின்று இந்தத் தேவதாருவைக் காவல்புரி என்று கட்டளையிட்டார்.

"அன்றுதொடங்கி இந்தத் தேவதாருவைக் காவல் புரிந்து வருகின்றேன். இன்றுவரையும் யாதோர் உணவும் எய்தவில்லை. இக்காட்டிலே ஒரு காததூரம் வரையும் ஒரு பிராணியும் வருவதில்லை. நானோ பெரும் பசியுடையேன். நான் செய்த நல்வினையினாலே இன்றைக்கு இந்தப் பசு வந்து எய்திற்று. இதற்குக்கிட்ட இயமனும் வந்து நிற்கின்றான். இதனை உண்டு பசியைத் தணிக்க எண்ணுகின்றேன். நீ இதன்மேலே வைத்திருக்குஞ் சிந்தையை விட்டுச் செல்லுதி. குருவின் பொருளாகிய இதனைக் காக்க முயன்றும் வாய்க்கவில்லை. நீ யாது செய்வாய்! உனது காவலிலே பிழையுமில்லை" என்று சொல்லிற்று. அதனைக் கேட்ட அரசன் சொல்லுவான்.

**அரசன் சொல்லுதல்**

"சிங்கமே நான் சொல்வதையும் நன்கு கேள். தோல்வியடைந்த நான் சொல்லும் வார்த்தை நல்லறிவுடைய உனக்கு நகைக்கிடனாகாது. உனக்கெதிரே நிற்கும் எனது சரீரத்தை உணவாக உண்டு உனது பசியைத் தணித்துக்கொள். சிவபிரானுடைய ஆணைக்கும் பழுதில்லை. இந்தப் பசுவும் இனிது சீவிக்கும். 'மாலைக்காலத்திலே என்னுடைய மாதா வந்து பாலைத் தரும்' என்று பசியோடு நிற்குங் கன்றுக்கும் பால் தவறாது. குருவாகிய வசிட்டருடைய யாகமும் பாலினாலே பங்கமடையாது. ஆதலால் இந்தப் பசுவை எப்படியும் விட்டுவிடுக" என்று அரசன் இரந்து வேண்டினான். சிங்கம் கேட்டுச் சிரித்துச் சொல்லும்.

**சிங்கம் மறுத்துரைத்தல்**

"அரசனே! அழகிய சரீரம், இளமை, அரசியல் முதலிய சிறப்புக்களெல்லாஞ் சேர்ந்திருக்கின்றாய். அவைகளை யெல்லாம் அற்பமான இந்தப் பசுவின்பொருட்டு வீணாக இழந்து விடுதல் நீதியன்று. செய்வனவுந் தவிர்வனவும் சிறிதும் அறியாத மூடனாயிருக்கின்றாய்."

கந்த வேணிக ரிளமையு நறுமலர்க் கணைக்கை
அந்த வேள்பா வழகுமுற் றுடையைநீ டயனார்
தந்த பாருல களிப்பதை நீத்திவ ணடந்த
சிந்தை யேதகொ னீகொலோ கற்றறி சிறியோய்.

—இரகுவமிசம்

"அரசனே! நீ இறந்தாயாயின், இந்தப் பசு ஒன்று தான் உய்வடையும். உன்னாற் காக்கப்படும் உயிர்களெல்லாம் கவலைக்கடலிலே முழுகி வருந்தும். ஆதலால் நீ இறவாமல் நின்று உயிர்களைக் காத்தல் உத்தமம். பசுவைப் பாதுகாவாது கொல்லவிட்டாய் என்று குருவாகிய வசிட்டமுனிவர் கோபிப்பாராயின், ஆயிரக்கணக்கான வேறு பசுக்களை அவருக்குக் கொடுத்து அவர் கோபத்தைத் தணித்துக்கொள்" என்று சிங்கஞ் சொல்லிற்று. அரசன் அதனைக்கேட்டுப் பின்னுஞ் சொல்லுவான்.

**பின்னுமரசன் சொல்லல்**

"சிங்கமே! நானோ சத்திரியன். சத்திரியன் என்பது * சதத்தினின்று காப்பவன் எனப் பொருட்படும். சத்திரியன் என்னும் பெயரின் பொருளைப் பேணி நடவாத அரசனுடைய அரசியலாற்பயன் யாது? விசிட்டமான பசுக்கள் கோடி கொடுத்தாலும் வசிட்டருடைய

* சதம்—காயம்; க்ஷதம் என்பதன் விகாரம்.

கோபம் தணியாது. இந்தப் பசுவோ காமதேனுவின் கன்று. என்னுயிரை விட்டேனும் இந்தப் பசுவை மீட்டுக்கொள்ளல் வேண்டும். இதனை நீ கொல்லுவாயாயின் மாலைக்காலத்திலே மாதா வந்து பாலைத் தருமென்று வழிபார்த்திருந்த கன்றும் கதறி வருந்தும். குருவுடைய யாகமும் பாலின்றி வழுவுறும். காக்கும்படி எமது குரு என்னிடந் தந்த இந்தப் பசுவைக் காத்துக்கொள்ளாமல் கைவிட்டு அந்தோ! அந்தக் குருவின்முன் அஞ்சாமல் எப்படி நிற்பேன்? என்னுடைய இந்த உடம்பு அழிந்து போதல் உனக்கு இட்டமில்லையாயின் எனது புகழுடம்பு எப்படி நிலைக்கும்? மண், நீர் முதலிய பூதங்களாலாய இந்த மாயவுடம்பிலே என்போலிகளுக்கு விருப்பம் இல்லை.

"இப்பொழுது நீயும் நானும் கலந்து பேசிய வார்த்தைகளாலே உனக்கும் எனக்கும் நட்புண்டாய் இருக்கின்றது. நண்பனாகிய நான் சொல்லும் வார்த்தைகளை நீ மறுத்தல் நீதியன்று," என்று சொன்னான். அதனைச் சிங்கம் கேட்டு, "அப்படியாகுக" என்று சொல்லி அந்தப் பசுவை விட்டது. இடக்கையின் தம்பனமும் நீங்கிற்று. அரசன் ஆயுதங்களை எறிந்துவிட்டு தன் சரீரத்தை ஒடுக்கிக்கொண்டு சிங்கத்துக்கு முன்னே வீழ்ந்தான். வித்தியாதரர்கள் சொரிந்த புட்பமாரியும் வீழ்ந்தது. "மகனே நீ எழுந்து நில்" என்று ஒரு வார்த்தையும் நிகழ்ந்தது. அதனைக்கேட்ட அரசனும் எழுந்து நின்று சிங்கத்தைப் பார்த்தான். சிங்கம் காணப்படவில்லை; நந்தினிதானே காணப்பட்டது. அரசன் நந்தினியை நோக்க நந்தினி சொல்லுகின்றது:

நந்தினி வரங்கொடுத்தல்

"அரசனே! இந்த மாயங்களையெல்லாம் யானே செய்து உன்னைப் பரிசோதித்தேன். வசிட்டருடைய மகிமையினாலே இயமன்றானும் என்னை அணுகமாட்டான். பின்னர்ச் சிங்கம் முதலிய தீய பிராணிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அரசனே! நீ குருவிலே வைத்திருக்கும் பத்தியும், என்னிலே வைத்திருக்கும் பத்தியும் என்னை மகிழ்விக்கின்றன. நீ விரும்பிய பொருளை என்னிடங் கேள். என்னைப் பாலொன்று மாத்திரங் கொடுக்கும் பசு என்று எண்ணாதே! விரும்பிய பொருள்களையெல்லாங் கொடுப்பேன். † காமதேனு என்னும் நாமமும் எனக்குண்டு" என்றது. அதனைக்கேட்ட அரசன் மிக மகிழ்ந்து "என் குலத்தை இனிது விளக்கும் ஒரு புத்திரன் சுதக்கிணையிடந் தோன்றுவதற்கு வரந்தரவேண்டும்" என்று கேட்டான். நந்தினி "நீ விரும்பியபடி புத்திரன் ஒருவன் உற்பத்தியாகும்படி வரந் தந்தேன். அரசனே! என்னுடையபாலை ஒரு தொன்னையிலே கறந்து நீ குடிக்கவேண்டும்" என்றது. அரசன் "கன்றுங் குடித்து முனிவர் யாகத்துக்கும் உபயோகமாகி எஞ்சிய பாலை முனிவர் அநுமதியும் பெற்று உண்ண விரும்புகிறேன்" என்றான். அதனை நந்தினி கேட்டு அகமிக மகிழ்ந்து இமயக் குகையினின்றும் திரும்பி முனிவருடைய ஆச்சிரமம் நோக்கி வந்தது. பத்தினியும் முன்போலச் சென்று வழிபாடு செய்து கூட்டிவந்தாள்.

வசிட்டமுனிவர் நந்தினி வரங்கொடுத்த செய்தியை அரசனுடைய முகக்குறியால் அறிந்துகொண்டார். அர

† காமம்—விரும்பியது. தேனு—கொடுப்பது.

சனும் நிகழ்ந்த காரியத்தை அவருக்குச் சொல்லினன் மனைவிக்குஞ் சொல்லினன். அதன்பின்பு முனிவருடைய அனுமதியோடு கன்றுங்குடித்து யாகத்துக்கும் உபயோக மானபின், அந்த நந்தினியின் பாலைக் கறந்து குடித்தான். குடித்தபின் அங்கே படுத்திருந்து விடியற்காலத்திலே பத்தினியோடுஞ் சென்று அருந்ததியையும் வசிட்டரையும் வணங்கி அனுமதிபெற்று அதன்பின் நந்தினியையுங் கன்றையும் வணங்கி மனமகிழ்ச்சியோடுந் தனது நகரியிற் போய் மந்திரிமாரிடம் வைத்த அரசியலை நடத்தினன்.

---

## ச. இரகுவுற்பத்தியும் யாகஞ் செய்தலும்

பின்னர்ப் பத்தினியுங் கருப்பவதியாகிப் பத்துமாத முஞ் சென்று புத்திரன் ஒருவனைப் பெற்றாள். திக்குக ளெல்லாம் மகிழ்ந்தன. வாயுவுஞ் சுகமாய் வழங்கிற்று. விளக்கும் அசைவின்றி விளங்கிற்று. அரசனும் மைந்த னைப் புகழ்ந்துகூறும் அந்தப்புர சனங்களுக்குப் பொருள் களை வாரிக்கொடுத்தான். தேவ துந்துபிகளும் ஆரவாரித் தன. மைந்தனைக்கண்ட அரசன் மனம் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போலப் பொங்கி எழுந்தது. பிதுர்க்கடனும் அரசனை நீங்கிற்று. சாதகம் முதலிய கிரியைகளும் வசிட் டராற் செய்யப்பட்டன. மைந்தனுக்கு இரகு என்னும் நாமம் அரசனால் இடப்பட்டது. மைந்தனாகிய இரகு என்பவன் வளர்பிறைபோல வளர்ந்து தந்தை தாயரை மகிழ்வித்தான்.

இந்த மைந்தனாகிய இரகு என்பவன் ஐந்தாம் வய சிலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றுச் சகல கலைகளையுங் கற்றுணர்ந்து சாமர்த்தியவானாயினன். அரசனும் மைந்த

ளுகிய இரகுவின் துணைவலியாலே வாயுவின் துணைபெற்ற அக்கினிபோல மிக்கு விளங்கி, அரச கன்னிகைகளையும் அவனுக்கு மணம் புணர்வித்து அவனை இளவரசனுக்கி ஞன். அதன்பின் அரசன் அசுவமேத யாகஞ் செய்யத் தொடங்கி யாகக் குதிரையைக் காவல்செய்யும்படி மைந்த ளுகிய இரகுவையே நியமித்தான்.

**யாகக் குதிரையைக் காவல் புரிதல்**

தன்னிட்டமாகச் செல்லும்படி அவிழ்த்து விட்ட யாகக்குதிரையைக் காவல்செய்து பின்னேசென்ற இரகுவின் கண்களை இந்திரன் வந்து மயக்கி அந்தக் குதிரையைக் கவர்ந்து மறைந்து சென்ருன். யாகமுந் தொண்ணூற்றென்பது வரையிலே முடிந்தன. பொள்ளெனக் குதிரை காணுமற்போன செய்தியை இரகு என்பவன் நோக்கிக் கோபதாபங்கொண்டு வீரங்கூறி நின்றபோது நந்தினியென்னும் பசுவின் கன்றும் அங்கே வந்தது. அதன் சிறுநீராற் கண்களைக் கழுவி இரகு மேலே பார்க்கும்போது குதிரையைக் கவர்ந்து செல்லும் இந்திரனைக் கண்டு கோபங்கொண்டு சொல்லுவான். “இந்திரனே! யாகங்களெல்லாவற்றினுஞ் சென்று அவிப்பாகம் ஏற்கும் நீ, என் பிதாவின் யாகத்தை எப்படிக் கெடுக்கத் துணிந்தாய்? யாகபதியாகிய நீ யாகத்தை அழிக்கத் துணிவாயாயின், நீதிநெறி யாவரிடத்திலே நிலைக்கும். வேத விதி யாதாய் முடியும்? உலகத்தார் உன்னை இகழாரா? உனக்கிது தகுதியன்று. ஆதலால் இந்த யாகக் குதிரையை என்னிடம் விட்டு, இந்திரனே! ஐந்தரு நீழலிற்போய் அரசியலோடும் வாழ்தி” என்று சொன்னன். அப்போது இந்திரன் சொல்லுவான்:

"அரசனே! உன் பிதாவாகிய திலீபன் என் பதவியைக் கவர்தற்குக் கருதி யாகம் நூறு செய்கின்றான். பாடுபட்டுத் தேடினவர் தமது சொத்தைப் பிறர் கவர விடுவாரா? அரசகுலத்திற் பிறந்தவர் பகைவரிடத்தன்றிப் பிறரிடத்துப் பாதகஞ் செய்யத் துணியார். புருடோத்தமன் என்னும் நாமம் விட்டுணுவுக்கன்றிப் பிறர்க்கில்லை. அவைபோல சதக்கிருது என்னும் நாமம் எனக்கன்றிப் பிறர்க்கில்லை. இந்த நாமத்தைப் பிரிக்க முயல்பவன் நீதியாளனுவானு?" என்று கூறினன்.

பின்னர் இந்திரன் இரகு என்னும் இருவர்க்கும் இடையிலே தொந்தமான கோரயுத்தம் நடந்தது. இந்திரன் சற்றே இளைப்படைந்து இவனை வேறொன்றினாலும் வெல்லக் கூடாது என்று கருதி வச்சிராயுதத்தை எடுத்து இரகுவின்மேல் செல்லும்படி விரைவிலே விட்டான். வச்சிராயுதம் இரகுவின் மார்பிலே வந்து தாக்கிற்று. இரகுவும் பதைபதைத்துக் கீழே வீழ்ந்து சிறிது போது மூர்ச்சையாய்க் கிடந்து பின்னர் தெளிந்து எழுந்தான். இரகுவின் சாமார்த்தியத்தை இந்திரன் கண்டு மிகவும் வியந்து சொல்வான்: "இரகுவே! என்னுடைய வச்சிராயுதம் பட்டுப் பிழைத்தவர் உன்னையன்றி ஒருவரும் இல்லை. உன்னை நான் பாராட்டுகின்றேன். இக்குதிரையை மாத்திரம்விட்டு வேறே எதனையாவது கேள்" என்றான். அதனைக்கேட்ட இரகு என்பவன் "இக்குதிரையை என்னிடம் விடுதற்கு மனம் இல்லையாகின், என்னுடைய தந்தை நூறு யாகமும் செய்துமுடித்த பேறுடையனுய் விளங்க நீ வரந்தால் வேண்டும்" என்றான். இந்திரனும் அவ்வரங்கொடுத்துத் தேவுலகம் போனான். தூதுவரும் நிகழ்ந்த காரி

யங்களை எல்லாம் அறிந்து போய்த் திலீபனுக்கு அறிவித்தார்கள். இரகு என்பவனும் வெற்றிபெற்றாலும் குதிரை கிடையாமையாற் சிறிது கவலையோடும், அரசனுடைய சபையிற் போனான். அரசனும் இரகுவைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு முடியுஞ் சூட்டி அரசியலில் வைத்துவிட்டு மனைவியோடும் வனத்திற்போய் வானப் பிரஸ்தனாய்த் தவஞ்செய்தான்.

## ரு. திக்குவிசயஞ் செய்தல்

இரகு என்பவனுந் தந்தையாற் கொடுக்கப்பட்ட அரசியலைச் சனங்களெல்லாம் மனங் களிக்க நடாத்திவந்தான். செல்வப்பொருளும் கல்விப்பொருளும் மேலும் மேலும் சேர்ந்தன. செல்வப்பொருளைப் பின்னும் பெறக் கருதி அரும்பொருள் கூறும் மந்திரிமாரை அழைத்து ஓரிடத்திலிருந்து ஆலோசனை செய்வான். "மந்திரிமாரே! யான் இப்பொழுது திக்கு விசயஞ் செய்து பொருளீட்டக் கருதுகின்றேன், உங்கள் கருத்து யாது?" என்று வினவினான். மந்திரிமார்களுந் தங்கள் கருத்தினைச் சொல்லுவார்: "அரசனே; உனதருளன்றி வேறுமுண்டோ. ஆலோசனையை மேற்கொண்டொழுகும் அரசன் அரசர்க்கரசனாய் ஏக சக்கரவர்த்தியுமாவான். அரசனானவன், சந்தி, விக்கிரகம், யானம், ஆசனம், துவைதம், ஆச்சிரமம் என்னும் ஆறு குணங்களையும்; விருத்தி, தானம், சுயம் என்னும் மூன்று தயங்களையும், மந்திரசத்தி, பிரபுசத்தி, உற்சாகசத்தி என்னும் மூன்று சத்திகளையும்; மந்திரசித்தி, பிரபுசித்தி, உற்சாகசித்தி என்னும் மூன்று சித்திகளையுந் தெரிந்திருத்தல் வேண்டும்."

சந்தி–நட்பு. விக்கிரகம்–விரோதம். யானம்–மேற் சொல்லல். ஆசனம்–காலம் பார்த்திருத்தல். துவைதம்–பிரித்தல். ஆச்சிரயம்–ஒருவன் போர்கடக்க மற்றொருவனை யடைதல். விருத்தி–தன்செயல் வளர்ந்திடப் பகைவன் செயல் குறைந்திடல். தானம்–பொருள் கொடுத்துச் சமமாக்குதல். கயம்–தன்செயல் குறைந்திடப் பகைவன் செயல் வளர்ந்திடல். மந்திரசத்தி–ஆலோசனைவலி. புரபுசத்தி–பெருமைவலி. உற்சாக சத்தி–முயற்சிவலி.

"சந்தி முதலிய குணங்களையும் பிறவற்றையும் அறிந்த அரசனாலே அடையப்படாத பூமி யாது? சத்துருக்களை வேரறக் களைதலின்றி அரசர்கள் தழைப்பதில்லை. திக்குகளிலே சென்று அரசர்கள் யாவரையும் வென்று திரவியங்களை ஈட்டல் வேண்டும். பகைமையைச் சிறிதென்று பார்த்துக் களையாது விடுதல் நன்றன்று. சமுத்திரம் நீரினாலே நிறைந்துளதாயினும் ஆற்றுநீரையும் ஏற்று வாங்குகின்றது. ஆலோசனை விதியும் இதுவே யாகும்" என்றார்கள். இதனைக்கேட்ட இரகுவென்பவன் பறையறைந்து சேனைகளையுஞ் சேர்த்துக்கொண்டு தானும் எழுந்து திக்குவிசயஞ் செய்யக் கருதி முதற்கட் கிழக்குத்திசையை நோக்கிச் சென்றான். முன்னே இராசகாந்தி சென்றது. அதன் பின் சேனைகள் சென்றன. வங்கம், கலிங்கம் முதலிய தேசங்களை வென்று அங்கங்கே அரசர்களை அடக்கித் திரவியங்களையுஞ் சேர்த்தான்.

கிழக்குத்திசையை வென்றபின், தெற்குத்திசையை நோக்கிச் சென்றான். அங்கே பாண்டியவரசர்கள் இரகுவுடைய பிரதாபத்துக்குப் பயப்பட்டு விரைவிலே

பணிந்து தாங்கள் திரட்டிய முத்துக் குவையெல்லாம் அள்ளிக் கொடுத்தார்கள். அங்குள்ள மலயம், தார்த் தூரம் என்னும் மலைகளையுங் கண்டுசென்றான். சென்று மேற்குத திசையிலே போய்ப் பலவகை யரசர்களையும் வென்று திரவியஞ் சேர்த்துக்கொண்டு அக் கடற்கரை யோரமாய் வடக்கே சென்று பாரசீகம், காசுமீரம், காமரூபம் முதலிய தேசங்களையும் வென்று திரவியங் களையுஞ் சேர்த்து இமயமலையிற் போய் அங்குள்ளார் கொடுக்கும் உபகாரங்களையும் பெற்றுக்கொண்டு திரும்பி வந்து அப்பொன்களையெல்லாங் கொடுத்து விச்சுவசித்து என்னும் யாகத்தையுஞ் செய்து முடித்தான்.

---

## ௬. கௌற்ச முனிவர் பொருள் வேண்டல்

**யா**கத்திலே திரவியங்களையெல்லாம் வாரி வாரி யாவர்க்கும் வீசி வறுமையுற்றிருக்கும் இரகு என்பவனை வாதந்து முனிவருடைய சீடராகிய கௌற்ச முனிவர் குருதக்கிணைக்குப் பொருள் பெறும்பொருட்டு வந் தடைந்தார். வந்தடைந்த அந்த முனிவரை இரகு மஹா ராஜா எதிர்கொண் டழைத்துவந்து இருக்கையி லிருத்தி மட்பாத்திரத்திலே கொண்டுவந்த அருக்கியம் முதலிய வற்றையுங் கொடுத்து வணங்கினார். வணங்கிய பின் “முனிபுங்கவரே! உமது குருவாகிய வரதந்துமுனிவர், சுவாத்தியராய் இருக்கின்றாரா? அவருடைய தவவொழுக் கந் தவறாது நடக்கின்றதா? அவராலே வளர்க்கப்பட்ட ஆச்சிரம மரங்கள் வாயு தேயுக்களால் வாதையின்றி

வளர்க்கப்படுகின்றனவா? மான்கன்றுகள் இடையூறின்றி வசிக்கின்றனவா? ஆறிலொன்றாகிய வரிப்பொருள் தவறாது கொடுக்கப்படுகின்றதா? உணவாகிய குளநெல்லுகள் ஆடு மாடுகள் மேயாது வளர்கின்றனவா? பிரமசாரியாகிய நீர் இல்லறஞ் செல்லற்குக் குருவின் அநுமதி கிடைத்துவிட்டதா?" என்னும் வினாக்களை வினவினர்.

அப்பொழுது கௌற்சர் சொல்லுவார்: "இராசாவே! நீர் அரசராயிருந்து காவல் புரியும்போது எங்களுக்குக் குறை எப்படி வரும்? எங்களுக்கோ குருதக்கிணைக்குப் யாதொரு குறையுமில்லை. நான் வரபொருள் கேட்டல் தந்து முனிவரிடத்திலே ஆறங்கம், நால்வேதம், மீமாம்சை, புராணம், தருமசாஸ்திரம் என்னும் பதினான்கு வித்தைகளையும் கிரமமாகப் படித்தேன். அவர் தம்மிடத்திலே யான் வைத்திருக்கும் பத்தியையே தமக்குத் தக்கிணையாக எண்ணியிருந்தார். நான் அதனை நோக்காமல் உமக்குக் குரு தக்கிணையாக எவ்வளவு திரவியந் தரவேண்டுமென்று பின்னும் பின்னும் கேட்டேன். அவர் கோபங் கொண்டு என்னிடம் பொருளில்லாமையையுங் கருதாமல் பதினான்கு வித்தைகளுக்கும் பதினான்கு கோடி பொருள் தரவேண்டும் என்றார். அப்பொருளின்பொருட்டு இப்பொழுது உம்மிடம் வந்தேன். பொருள்கள் எல்லாவற்றையும் யாகத்திலே போக்கிவிட்டு மட்பாத்திரம் மாத்திரம் வைத்திருக்கும் உம்மைக் கேட்டற்கு யாதும் நீதியில்லை. வேறொரு கொடையாளனிடம் போக விரும்புகின்றேன்" என்றார். அவரைத் தடுத்து அரசன் சொல்லுவான்:

"முனிசிரேட்டரே! என்னிடம் குருதக்கிணைக்குப் பொருள் கேட்டுவந்தவர் பொருள் பெறுமற் போயினர் என்ற நிந்தைமொழி எனக்கில்லாமல் இருக்கவேண்டும். முனிவரே! இரண்டு மூன்றுநாளைக்கு இங்கேஇருந்துகொள்ளும். எங்கேயாவது பொருள் தேடித் தருவேன்" என்று சொல்லிக் குபேரனிடம் அவனுடைய திரவியசாலையிலிருந்த பெருந்தொகைப் பொருள்களை வாரிக்கொண்டுவந்து கௌற்சருக்குக் கொடுத்தான். அது குருவுக்குக் கொடுக்குந் தொகையிலும் அதிகமாயிருந்தது. அதனைக் கண்ட கௌற்சர் சொல்லுவார்: "அரசனே! நீதிவழியினின்று திரவியத்தை ஈட்டல், வளர்த்தல், காத்தல், தக்கார் கரத்திற் கொடுத்தல் அரசன் றொழில் என்று பெரியோர் கூறுவர். உன் மகிமையோ அறிதற்கரியது. தேவுலகப் பொருளையும் பெறவல்லாய். அரசனே! உன்னைப்போன்ற புத்திரன் ஒருவனைப் பெற்றுக்கொள்க" என்று வாழ்த்துரை கூறித் தமது குருவின் சமீபம் போனர். பொருள்கள் எல்லாம் ஒட்டகங்களிலும் பெட்டைக் குதிரைகளிலும் ஏற்றப்பட்டுப் போயின. முனிவனது வாழ்த்துரையால் அவனுக்குப் புதல்வனும் ஒருவன் பிறந்தான். பிரம முகூர்த்தத்திற் பிறந்த காரணத்தினல் அயனென்னும் நாமதேயம் அவனுக்கு இடப்பட்டது.

*அரசன் பொருள் கொடுத்தல்*

---

## எ. மாலையீடு

புத்திரனகிய அயன் பலவகைக் கலைகளையுங் கற்றுவல்லனய்வளர்ந்து விவாகபருவம் மேவியபோது விதர்ப்பதேசத்து அரசனகிய போசராசன் தனது தங்கை

**சயமரசபைக்குப் போதல்**

இந்துமதியுடைய சயமரசவைக்கு அயனையும் அனுப்பும்படி இரகுராசனுக்குத் தூதரை அனுப்பினன். இரகுராசனும் போசராசன் சதாசாரங்களாலும் சற்குணங்களாலும் மிக்கவனென்றும் சம்பந்தஞ் செய்தற்குத் தக்கவன் என்றும் இனிதறிந்து அந்தச் சயமரசவைக்கு அவனையும் அனுப்பினன். அயனும் நால்வகைச் சேனைகளோடுஞ் சென்று நருமதையாற்றங் கரையை அடைந்தபோது யானை ஒன்று நருமதை ஆற்றிலே நீந்தி முழுகிக் கரையை அடைந்து அரசனுடைய சேனை யானைகளிலே நெருங்கி வந்தது.

**கந்தருவன் சாபம் தீர்த்தல்**

அதனை நோக்கிய அயன் அந்த யானையின் மத்தகத்திலே தைக்கும்படி வித்தகமான பாணம் ஒன்று விட்டான். பாணம் பட்டவுடனே அந்த யானை தன்னுடலை விட்டு ஒரு புருடனாய் வந்து அயனை நோக்கிச் சொல்லும்: "அரசனே! என் பெயர் பிரியம்வதன். என் பிதாவின் பெயர் பிரியதர்சனன் என்னும் கந்தர்வன். மதங்க முனிவருடைய சாபத்தினாலே இந்த யானை வடிவத்தை எடுத்தேன். இந்தச் சாபம் எப்போது நீங்கும் என்று மதங்க முனிவரை இரந்துகேட்டேன். மதங்கமுனிவரும் என்மேல் இரங்கி இக்குவாகு மரபிற் பிறந்த அயன் என்னும் அரசன் உனது மத்தகத்திற் பாணம் விடும்போது சாபம் நீங்குமென்று தீர்ப்புஞ் சொன்னார். இக்காரியம் எப்போது சம்பவிக்கும் என்று எதிர்பார்த்திருந்தேன். இப்பொழுது உம்மாற் பாணம் விடப்பட்டுச் சாபம் நீங்கினேன். இச் சாபத்தை நீக்கிய உமக்குக் கைம்மாருகச் சம்மோகனம் என்னும் படையைத் தருகின்றேன். இது

விடுக்கும்போது ஒரு மந்திரமும் ஒடுக்கும்போது ஒரு மந்திரமுமாக இரண்டு மந்திரம் உடையது. ஒருகாலமும் உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கமாட்டாது. சத்துருவை பயக்கி வெற்றியை மாத்திரம் கரத்திற் கொடுக்கும்" என்றான். அப்படையை அயனும் அங்கீகரித்துக்கொண்டு விதர்ப்பநாடு நோக்கினான். அந்தக் கந்தருவனும் அளகாபுரியை நோக்கினான்.

**அயனை உபசரித்தல்**

போசராசன் தனது நகரியின் புறத்தே அயன் வந்தான் என்பதை அறிந்து எதிர்கொண்டு வந்து அழைத்துப்போய் ஆசனத்திலிருத்திச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போலச் சந்தோஷத்தினாற் கிளர்ந்தான். அங்கே சயமரசவைக்கு வந்த அரசர் யாவரும் அன்றிரவு சற்றும் நித்திரையின்றிக் கிடந்தார்கள். அயனோ நித்திரையிற் பங்கமடைந்திலன். விடியற்காலம் வந்தவுடனே மங்கலபாடகர்கள் இங்கிதம்பெறப் பாடும் பாட்டுக்களைக் கேட்டுக் காலைக்கடனை முடித்து ஆடையாபரணங்களை அணிந்து சயமரசவையிற் போய்ப் போசராசன் காட்டிய ஆசனத்திலேறி ஐந்தருவின் நடுவிலே விளங்கும் பாரிசாத மரம்போல அரசர் யாவர்க்கும் நடுவே விளங்கினான். அப்போது இந்துமதியும் சிவிகை ஒன்றிலே ஏறி, பரிவார சனங்கள் பக்கத்திலே சூழ்ந்துவர சயமரசவையிற் புகுந்தாள்.

**அரசர் செயல்**

அரசர் யாவரும் இந்துமதியையே நோக்கி ஆசைமிகுந்து பலவித சேட்டைகளையுஞ் செய்தார்கள். அவருள்ளே ஓரரசன் தன் கையிலே இருந்த தாமரைப்பூவை அடிக்கடி கழற்றி அலைத்துக்கொண்டிருந்தான். மற்றோ ராசன்

தன்னுடைய உத்தரீய வஸ்திரத்தை ஒதுக்கி மேலே எடுத்துவிட்டு முகத்தையும் ஒருபக்கத்திலே சாய்த்துக் கொண்டிருந்தான். மற்றோரரசன் இடக்கரத்தை எடுத்துயர்த்திச் சிங்காசனத்திலே ஒருபக்கத்தில் சேரவைத்து முத்துமாலையையும் முதுகிலே ஒதுக்கிவிட்டு மித்திரன் ஒருவனோடு பேசிக்கொண்டிருந்தான். மற்றோரரசன் கையிலிருந்த வெண்டாழம்பூமடலை நகத்தாற் கிழித்துக்கொண்டிருந்தான். மற்றோரரசன் சூதாடு கருவிகளைச் சூழப்பரப்பிச் சூதாடிக்கொண்டிருந்தான். மற்றோரரசன் சிரத்திலே கரத்தைவைத்துச் சிறிதும் பேசாதிருந்தான். இப்படியே சேட்டை செய்துகொண்டிருக்கும் அரசர் யாவரையும் சபைப்பழக்கந் தெரியாத வீணரென்று கருதி இந்துமதி வெறுத்தாள்.

**அரசர்களைக் காட்டிக் கூறுதல்**

அதன்பின் சுனந்தை என்பவள் அச்சபையில் இருக்கும் அரசர் யாவரையும் தனித்தனி காட்டி அவர்கள் பெருமையை இந்துமதிக்குச் சொல்லக் கருதி முதற்கண்ணே மகததேச ராசன் முன்னிலையிற் கொண்டுபோய்ச் சொல்லுவாள்: "இந்துமதியே! கேண்மதி இவன் மகததேசராசன். பகைவனைப் பரிதாபம் மேவச்செய்தலாற் பரந்தபன் என்னும் பேர் படைத்தவன். அடைக்கலம் புகுவோர்க்கும் முனிவர்க்கும் பெருந்துணையாய் உள்ளவன். இடைவிடாது செய்யும் யாகங்களால் இந்திரனையும் அழைப்பவன். பிரசைகளிடத்திலே பிரியம் மிக்கவன்" என்றாள். இந்துமதி கேட்டுக்கொண்டு அந்த அரசனை வணங்கிவிட்டு அப்பாற் சென்றாள். அதனைக்கண்ட சுனந்தை அங்கதேசராசன் முன்னிலையிலே அவளைக் கொண்டு

போய் "இவன் அங்கதேசராசன். தேவப் பெண்களும் ஆவல்கொள்ளத்தக்க பேரழகும் இளமையும் பெற்றவன். முன்னொரு சாபத்தினாலே இங்கே வந்த திக்கியானைகளை எல்லாம் முனிவர் நூல்வழிநின்று முறைபெற அடக்கினவன். வெவ்வேறு இடங்களிலே தனித்தனி விரும்பி வசிக்கும் இலக்குமி சரஸ்வதி என்னும் இரு பெண்களும் ஒருங்குகூடிவந்து தன்பால் வசிக்கும் தகுதி பெற்றவன்" என்றாள். அதனையுங் கேட்டு இந்துமதி "அப்பாற் செல்லுக" என்றாள்.

அவளைச் சுனந்தை அப்பாற்கொண்டுபோய் அவந்தி தேச ராசனைக் காட்டி "இவன் அவந்திதேச ராசன். சஞ்ஞை என்னும் தன் மகள் பொருட்டுச் சாகத்தீவிற் கொண்டுபோய்த் தேவதச்சனாற் கடைந்தெடுக்கப்பட்ட சூரியன்போன்றவன்; அபரபக்கத்தின் அந்திக்காலத்திலும் அவந்திமாகாளருடைய சிரத்திலிருக்கும் செழும் பிறையைத் தெரிசனஞ்செய்து தொழுது வாழ்வோன்.

அடரிரு ளபர பக்க மதனினு மந்திக் காலத்
திடரின்மா காளன் சென்னி யிளம்பிறை தொழுது வாழ்வோன்
மடனலாள் வதியு மாற மயன்கடைந் தள்ள மாவெஞ்
சுடரனை னிவனே கண்டா யவந்திக னென்னச் சொன்னாள்.

— இரகுவமிசம்

மந்திரசத்தி, பிரபுசத்தி, உற்சாகசத்தி என்னும் சத்திகள் மூன்றும் உடையவன்," என்றாள். அவனையும் இந்துமதி விரும்பினாள் அல்லள்.

சுனந்தை அவளை அப்பாற் கொண்டுபோய் அநூப தேசராசனைக்காட்டி "இவன் அநூபதேசராசன், பிரதீபன் என்னும் பெயர் உடையவன். கார்த்தவீரியன் குலத்திற் பிறந்தவன், பரசுராமனுடைய மழுவின் நுதி

யைக் குவளைமலரின் மடல்போல மதிப்பவன். நருமதை ஆற்றங்கரையிலே அரண்மனை கட்டி வசிப்பவன்" என்றாள். அவனையும் இந்துமதி அவமதித்தாள். அவளைச் சுனந்தை அப்பாற் கொண்டுபோய்ச் சூரசேனராசனைக் காட்டி "இவன் சூரசேனராசன். சுசேடணன் என்னும் பெயருடையவன். தாய் மரபு தந்தை மரபு என்னும் இரு மரபுந் தூயவன். யமுனையாற்றங்கரையிலே அரண்மனைகொண்டு வசிப்பவன்" என்றாள். அவனையும் விரும்பினாள் அல்லள்.

அப்பாற் சுனந்தை அவளைக் கலிங்கதேச ராசன் முன்னிலையிற் கொண்டுபோய் "இவன் கலிங்கதேச ராசன். ஏமாங்கதன் என்னும் நாமதேயம் உடையோன். வில்வீரர்களுக்கெல்லாம் முன்னே செல்லும் வில்வீரன். மகேந்திரமலைக்கும் மகாசமுத்திரத்திற்கும்நரேந்திரன்" என்றாள். இந்துமதி அவனையும் விட்டு அப்பாற் சென்ற போது சுனந்தையானவள் பாண்டியதேச ராசனைக் காட்டி "இவன் பாண்டியதேச ராசன். அசுவமேத யாகஞ்செய்தவன். அகத்தியர் வசிக்கும் பொதியமலைக்குத் தலைவன். அரிசந்தனம் பூசிய சரீரமுள்ளவன்" என்றாள். அவனையும் விட்டு இந்துமதி அப்பாற் சென்றாள்.

அவளுக்குச் சுனந்தை அயன் என்பவனைக் காட்டிச் சொல்லுவாள்: "இவன் அயோத்திநகர ராசன். திக்குவிசயஞ் செய்து மிக்க பொருளீட்டி விச்சுவசித்து என்னும் வேள்வியுஞ் செய்த இரகுராசனுடைய புத்திரன். தேனுவை வழிபட்டு வரம்பெற்ற திலீபராசனுடைய பௌத்திரன். எருத்து வடிவங்கொண்டு நின்ற இந்திரனுடைய முதுகிலேறி நின்று தைத்தியரோடு போர்

அயனுக்கு மாலையிடுதல்

புரிந்த ககுத்தன் மரபுக்கு விளக்குப்போன்றவன். குலத்தாலும், குணத்தாலும், ஒழுக்கம் முதலியவற்றாலும், இழுக்கில்லாதவன். இளமைப் பருவமுடையவன்" என்றாள். இந்துமதியும் அப்பாற் செல்லாமல் அவனையே நோக்கி நின்றாள். அப்பொழுது சுனந்தை என்பவள் இந்துமதியை நோக்கி, "அரியாய்! அப்பாற் செல்லுவேமா?" என்ன, ஆரியை பார்த்த பார்வை சுனந்தையைக் கொல்லும்படி கிடந்தது.

சூதையட்டெழுந்தகொங்கைச் சுனந்தையைத்தோகையன்னாள்
காதலின் குறிப்பை நோக்கி யருகுபோய்க் களித்து மெல்லப்
பேதையப் பாற்செல் வேமோ என்றிடப் பிடிய ளைக்
கோதையைப் பார்த்த பார்வை கொல்லிய கிடந்த தன்றே.

இரகுவமிசம்.

சுனந்தையும் பயந்து மனந் தடுமாறிச் சும்மா நின்றாள். அந்தப் பொழுதிலே இந்துமதி பரிமளத் திரவியஞ் சேர்ந்த பூவின் மாலையை ஆவலோடும் எடுத்து சுனந்தை கையினாலே அயன் கழுத்திலே சேர்த்தாள். அதனை நோக்கிய நகரச் சனங்கள் யாவரும் அயனுக்கும் இந்துமதிக்கும் வந்து சம்பவித்த பொருத்தமான சேர்க்கையைப் புகழ்ந்து பேசினர். போசராசன் அயனையும் இந்துமதியையும் அழைத்துக்கொண்டுபோய், அக்கினி சான்றாகக் கடிமணம் புணர்விக்கக் கருதி அரசரையும் பிறரையும் அங்கே வருவித்தான்.

---

## அ. கடிமணஞ் செய்தல்

கடிமணச்சாலையிலே முடியுடையரசர்களும், மற்றையரசர்களும் பிறருமாக வந்து நெருங்கினர். அயனும் இந்துமதியும் பொன்மயமான ஆசனம் ஒன்றிலே

ஒருங்கு வீற்றிருந்தனர். போசராசனுடைய புரோகிதர் ஓமாக்கினியை வளர்த்துக் கிரியைகளைக் கிரமமாகச் செய்தார்கள். போசராசன் அக்கினி சான்றாக இந்துமதியை அயனுக்குக் கொடுத்துக் கிரியைகளையும் முடிப்பித்தபின் அங்கே வந்தோர் அனைவரையும் உபசரித்து அனுப்பினான். அரசர்களும் கீழே முதலை முதலிய பிராணிகளை வைத்துக்கொண்டு மேலே தாமரையை மலர்ந்துகாட்டும் பொய்கைபோல மனத்திலே பொறாமையுடையவர்களும் புறத்திலே விருப்பங் காட்டுவோருமாய்த் தம்பதிகளைக் கபடமாய் வந்தனை செய்துகொண்டு போனார்.

**போர்புரிதல்**

போசராசனும் சீதனமாகப் பொருள்களைக் கொடுத்துத் தம்பதிகளைப் போகவிட்டுத் தானும் அவர்களுக்குப் பின்னே துணையாகச்சென்று மூன்று நாளையின்பின் மீண்டு வந்தான். தந்தையுடைய திக்கு விசயத்திலே திரவியங் கொடுத்து நொந்ததனாலும்; இந்துமதியைப் பெறாமையாலும் சிந்தையிற் கொண்ட வைரமுடையராய் வந்து வழியிலே அயனை மறித்துப் போர்புரியத் தொடங்கினார்கள். அயன் இந்துமதியை மந்திரிகள் சிலரிடம் நிறுத்திவிட்டுக் கங்கையாற்றிலே சென்று கலந்து நெருங்கும் சோணையாறுபோல அந்த அரச சேனைகளிலே சென்று நெருங்கிக் கடும்போர் புரிந்தான். சதுரங்க சேனைகளுங் கலந்து போர்புரிந்தன. பிணங்களும் நெருங்கின. அரசர் பலர் அயனாற் கொல்லப்பட்டார். எஞ்சி நின்றோர், அயன்விட்ட மோகனபாணத்தினாலே அறிவு மயங்கிக் கீழே வீழ்ந்தார்கள். அயன் இந்துமதியை அழைத்துக்கொண்டு தனது நகரியிற் சார்ந்தான். இவை

களையெல்லாம் முன்னரே கேட்டு மனம் மகிழ்ந்திருந்த இரகுராசன் மைந்தனாகிய அயனைக் கொண்டாடி அரசியலையுங் கொடுத்துவிட்டு முத்திநெறிதேட முயன்றான்.

அயன் அரசியலைப் பெற்றபின் சனங்களெல்லாம் மனங் களிக்கும்படி அன்போடும் அருளோடும் பூமியைப் பரிபாலனஞ்செய்தான். தந்தையாகிய இரகுராசன் துறவி வேடம்பூண்டு நகர்ப்புறத்திலே போயிருந்து முத்திநெறி தேட முயன்றான். மைந்தனாகிய அயன் அரசியலின் வளர்ச்சியைத்தேட முயன்றான். இரகு முத்தியின்பொருட்டு முனிவரைச் சேர்ந்தான். அயன் வேறு தேசங்களையும் விரும்பி மந்திரிகளைச் சேர்ந்தான். இரகு மனத்தை ஒருவழியிற்படுத்துமாறு சனமில்லாத தனியிடத்திலே தருப்பையாசனத்திலே இருந்தான். அயன் அரசியல் காரணமாகத் தருமமயமான ஆசனத்திலே இருந்தான். இரகு யோகப்பயிற்சியினாலே பிராணன், அபானன் முதலிய வாயுக்களை வசமாக்கினான். அயனோ திரவியப் பெருமையாலே பகையரசர்களை வசமாக்கினான். இரகு தவாக்கினியினாலே பிறவிக்குக் காரணமான கருமங்களை நீறாக்கினான். அயனோ பகையரசர் தொடங்குங் கருமங்களின் பயனை முழுதும் நீறாக்கினான். இரகு சத்துவம் முதலிய குணங்களைச் சமநிலையாக்கிச் சயங்கொண்டான். அயனோ சந்தி, விக்கிரகம் முதலிய ஆறு குணங்களுள்ளே பேறுதர வல்லதொன்றைப் பெரிதாகக் கொண்டான். இரகு பரமாத்துமாவைக் காணும்வரையும் யோக சமாதியில் இருப்பான். அயனோ தொடங்கிய கருமத்தைப் பலன் காணும்வரையும் விடாமற் செய்வான்.

## ௯. தசரதனுற்பத்தி

இப்படியே அரசியலிலுந் துறவியலிலும் நின்ற அயன், இரகு என்னும் இருவருள்ளும் இரகு என்பவன் துறவியலிலே நின்று பலநாள் கழிந்தபின் யோக சமாதியினாலே பரமாத்மாவை அடைந்தான். அதனை மைந்தனாகிய அயன் கேட்டுக் கண்ணீர்விட்டுக் கவலைபூண்டு பின்பு தேறி அந்தியேட்டி முதலிய அபரக் கிரியைகளையும் அவனுக்குச் செய்வித்துப் பிறவாநெறியடைந்த பிதாவின்பொருட்டுக் கவலைகொள்ளல் நன்றன்று என்று தக்கோர்சொல்லிய புத்தியைக் கேட்டுப் பூமியைப் பரிபாலனஞ் செய்தான். பூமியும் மகத்துவமான புதிய இரத்தினங்களைப் பெற்றது. இந்துமதியும் உத்தமனான ஒரு புத்திரனைப் பெற்றாள். அப் புத்திரனுக்குப் பத்துத் திக்கிலுஞ் செல்லத்தக்க தேருடைமையாலே தசரதன் என்னும் பெயரிடப்பட்டது. இந்தப் புத்திரனாலே பிதிரர் கடனையும், வேதமோதுதலாலே முனிவர் கடனையும், யாகஞ்செய்தலாலே தேவர் கடனையும், நீக்கிய தந்தையாகிய அயன் பரிவேடம்நீங்கிய சூரியன்போல விளங்கினான்.

அயன் என்னும் அரசன் திரவியத்தாலன்றிச் சிறந்து விளங்கும் குணங்களாலும் பிறருக்குப் பேருபகாரஞ் செய்பவனாய் விளங்கினான்.

**இந்துமதி உயிர் நீத்தல்**

பெரும் பெலம் வீரம் முதலியன பிறர்க்குப் பீடைசெய்பவாகாமல் அடைக்கலம் புகுந்தோரைப் புரக்கும் பொருட்டாய் அமர்ந்தன. அவன் ஒருநாள் பொழில் விளையாட்டுக் கருதி அருகிலுள்ள சோலையொன்றிற்போய்ப் பூக்களைப் பறித்து விளையாடி இளைப்பாறி இருந்தபோது அந்தரவழியால் வந்த நாரதருடைய வீணையினின்றும்

மாலை ஒன்று தவறி மடியிற்கிடந்த இந்துமதியுடைய முலையிலே விழ்ந்தது. மாலையை நோக்கியவுடனே அவளும் மதிமயங்கிப் பரவசமாயினள். அதனை நோக்கிய அரசனும் மயங்கி வீழ்ந்தான். பரிவாரசனங்களும் பரிவுகொண்டு புலம்பினர். அன்னம், கிளி முதலிய பறவைகளும் அழுதன. அவர்கள்மேலே காற்று வந்து படும்படி ஆலவட்டம் முதலியவைகளை அசைத்து வீசினார்கள். அந்தக் காற்றுப்பட்டும் இந்துமதிக்கு மயக்கம் நீங்கவில்லை. அயனுக்கோ மயக்கம் நீங்கிற்று. அயனும் ஒருவாறு தெளிந்து இந்துமதியை நோக்கிப் புலம்புவான்.

அயன் புலம்புதல்

" இந்துமதியை மயக்கி வீழ்த்திய இந்த மலர்மாலை என்னெஞ்சிலே வைத்தும் என்னைக் கொல்லாத காரணம் என்னையோ! விதியானது மெல்லிய மலர் மாலையினாலே இவ்வுயிரைக் கொல்லுவித்ததற்குக் காரணம்யாது? மெல்லிய உடம்பை மெல்லிய மலர்கொண்டு கொல்லவேண்டும் என்பது கருதியோ? விதிவலியாலே சிலவிடத்திலே அமிர்தமும் நஞ்சாகுமா? பிரிய நாயகியே! உனக்கு நான் ஒரு குற்றமுஞ் செய்திலேன். இவ்வியல்புடைய என்னோடு நீ பேசாமல் இருப்பதென்ன? என்னைக் கேளாமல் இவ்வுலகம் நீக்கி அவ்வுலகம் போனது உனக்கு நீதியாகுமா? உன்னோடும் வந்த என்னுயிர் பின்னும் என்னிடம் வந்தது இக்கவலையெல்லாம் அநுபவித்தற்கா? இரவைப் பிரிந்துபோன சந்திரனும் பின்னும் இரவைவந்து பொருந்துகின்றது. நீயோ என்னைப் பிரிந்து பின்னொருகாலமும் வாராவழியிற் போயினை! உன் பிரிவைப் பொறுத்திருப்பது எப்படி? மெல்லிய

தளிர்களை அடுக்கிய படுக்கையிற் கிடந்து வருந்துகின்ற உன்னுடைய மெல்லிய சரீரம் சுடலையிலே அடுக்கிய முரட்டுக்கட்டைகளை எப்படித்தாங்கும்? பிரியநாயகியே! நீ மகிழும் பூவிலே தொடுத்த மேகலையை முழுதும் முடியாமலே இடையிலே விட்டு நித்திரைசெய்தல் நீதியாகுமா? பிரிய நாயகியே! என்னையும், வளர்த்த மான் கன்றையும், இளங்கிளியையும், அன்னப்பறவையையும், அடுத்து நிற்கும் மகளிர்களையும் மற்றைப் பொருள்களையும் மறந்து சென்றாலும் துதியைப் பிறைபோன்ற புதல்வனை மறந்து சென்ற காரணம் என்னையோ!" என்று புலம்பினான்.

என்னை வளர்மானை யனத்தை யிளங்கிளியை
வன்னமட வாயத்தை மற்றை மறந்தாலுஞ்
சொன்ன துதியைப் பிறைபோலுந் தோற்றச்சேய்
தன்னைமறந் தெவ்வாறு சென்றாய் தபக்திருவே.

—இரகுவமிசம்.

அதன்பின் பத்துநாள் சென்றபோதே அவளுக்குச் செயற்பாலனவாகிய அபரக் கிரியைகளை யெல்லாஞ் செய்து முடித்துக்கொண்டு நகரியிற்போயினன்.

அப்போது வசிட்டமுனிவருடைய சீடர்கள் அங்கே வந்து அரசனை நோக்கி "அரசனே! முக்காலசம்பவங்களையும் ஞானக்கண்கொண்டு முறைப்படக் காணும் குருவாகிய வசிட்டமுனிவர் உனக்குச் சொல்லுமாறு சொன்ன ஆசி வார்த்தைகளைச் சொல்லுகின்றோம். அரசனே! கேள்,

முற்பிறவி கூறல்

முன்னொருகாலத்திலே செயற்கரிய பெருந்தவஞ் செய்யுந் திருணவிந்து முனிவனுக்குத் தேவேந்திரன் பயப்பட்டு தவநிலையைக் குலைக்கும்படி அருணி என்னும் பெய

ருடைய அரம்பையை அனுப்பினன். அவளும் அம் முனிவர்க்கு முன்னே போய் நின்றாள். முனிவர் கோபங்கொண்டு மாநடப் பெண்ணாக எனச் சாபங் கூறினர். அவள் அந்தச் சாபத்துக்குப் பயப்பட்டு 'பகவானே! யான் இந்திரனுடைய ஏவலால் வந்தேன். எனது குற்றத்தைப் பொறுத்தருளும்' என்று பிரார்த் தித்தாள். முனிவர் அவள்மேலிரங்கி 'பெண்ணே! கற்பகமலர்மாலையை நீ காணும்போதே இச்சாபந்தீரும்' என்று முடிவுங் கூறினர். அந்த அருணிதானே இந்து மதியாய் வந்து பிறந்து உனக்கும் பெருந்தேவியாய் இருந்து கற்பகப் பூமாலையைக் கண்டவுடனே இந்த உற்பவம் நீங்கி ஓடினள்."

"அவளைக் குறித்துக் கவலைகொண்டது அமையும். எப்படி நீ அழுது புலம்பினாலும் அவளோ இனி வருவ தில்லை. பிறப்பவர் யாவரும் இறப்பது திண்ணம். அவளொடு நீ கூட இறந்தா யாயினும் அவளை நீ அடைவதில்லை.

உறுதி கூறல்

சகலவகையான உயிர்களும் தாம் தாம் செய்துகொண்ட பாவபுண்ணியங்களின் பலன்களை நுகரும்பொருட்டுப் பலவிடங்களுக்குப் போகின்றன. மூடர்கள் இறந்தவர் களை எப்பொழுதும் நினைந்து வருந்துவார்கள். அறி ஞர்கள் இறந்தவர்களை அப்பொழுதே மறந்துவிடுவார் கள். புகழ்பட வாழவேண்டுமாயின் இடரினுந் தளரா மல் இரு. அவளுக்குச் செயற்பாலனவாய சிரார்த்தங் களைச் செய். பூமியையும் பரிபாலனம் செய். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் வெற்றிகொண்ட நீ மற்றைச் சனங்கள்போல அற்றப் படுதல் அறிவன்று. காற்றினாலே அசைக்கப்படும்

மரங்கள்போல மலைகளும் அசைக்கப்படுமாயின் மலைக ளிடத்துள்ள விசேடம் யாது? அசைவற்றது என்னும் பெயரும் மலைக்கு நிலைக்குமா? என்றார்.

இப்படியே சீடர்வாயிலாக வசிட்டர் சொல்லுவித்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு சீடரை அனுப்பினான். அவ்வார்த்தைகள் அவன்மனதில் அங்கிகாரமாகவில்லை. வர வரக் கவலையோ மிகுந்தும் மைந்தனாகிய தசரத னுடைய இளமைப் பருவத்தின் நிமித்தம் எட்டுவருடங் கழிந்தபின் தசரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து அரசியலையும் அவன்மேல் வைத்துவிட்டுக் கவலையோ டும் உபவாசியாய் இருந்து கங்கா சரயு சங்கமத்திலே உடலைவிட்டுத் தேவுலகம் போனான்.

## ௧௦ தசரதனரசுபுரிதல்

தசரதராசன் தந்தையாற் கொடுக்கப்பட்ட அரசிய லைச் சனங்களெல்லாம் மனங்களிக்கும்படி சாத்திர நெறியிலே நின்று நடாத்தி வந்தான். சனங்களும் அவன்மேலே அன்புடையராய் ஒரு குறையும் இன்றி உவப்போடும் வாழ்ந்து வந்தனர். தீச்செயல்களும் தீக் குணங்களும் அவனிடத்திற் சிறிதுங் காணப்பட வில்லை. துன்பம் வறுமை சோரபயம் என்பன சனங்க ளிடத்தும் காணப்படவில்லை. கேட்டுக்குக் காரணமான ஈதிவாதைகள் நாட்டிலும் காணப்படவில்லை. கடற்கரை வரையும் பூமியைக் கைப்பற்றிப் பன்னிரண்டு ராச மண்டலங்களுக்கும் தலைமை எய்தினான். இலக்குமி தேவி நாராயண மூர்த்திக்குச் சேவை செய்வதுபோல தசரதனுக்கும் சேவைசெய்துவந்தாள். கோசலதேச ராசன் புத்திரியாகிய கௌசலை என்பவளும், கேகய

தேசராசன் புத்திரியாகிய கைகேயி என்பவளும், மகத தேசராசன் புத்திரியாகிய சுமித்திரை என்பவளும் அவனுக்கு மனைவிகளாயினர்.

இந்த மனைவியர் மூவரோடும் வீற்றிருந்து அரசு செய்யுங் காலத்திலே வசந்தகாலம் ஒன்று வந்தது. அந்த வசந்த காலத்திலே வேட்டையாடலை மிகவும் விரும்பி வேட்டைக்கு உரிய வேடங்களும் பூண்டுகொண்டு காட்டிற் பிரவேசித்தான். சேனைகளும் கூடிச் சென்றன. வேட்டை நாய்களும் வலை கயிறு முதலியவைகளும் கொண்டுபோகப்பட்டன. காடெல்லாம், அரசன் போனவுடனே, கதுமென இலைகளை உதிர்த்துத் தளிர்களைத் தளிர்த்து மலர்களைப் பூத்துப் பொலிவடைந்து விளங்கின. வன தேவதைகள் எல்லாம் மகாராசனை மகிழ்ச்சியோடும் பார்த்தன. கரடி புலி யானை கவரிமான் பன்றி சிங்கம் கடுவாய் முதலிய தீய மிருகங்கள் எல்லாம் அங்கங்கே உண்டியும் நீரும் உறைவிடமும் பெற்று மண்டிக் கொழுத்து மறைந்திருந்தன. அவைகளுள்ளே பல மிருகங்களைத் தசரதன் பாணம் விட்டுக் கொன்று குவித்தான். மறைந்துபோய் இருந்த மிருகங்கள் எல்லாம் சனங்களாலும் நாய்களாலும் வெளி வந்தன. பல மிருகங்களின் உறுப்புக்களை மாத்திரம் வெட்டிவிட்டான். சில மிருகங்களின் கொம்புகளை மாத்திரம் முரித்துவிட்டான். மான்குட்டி முதலியன கொல்லப்படவில்லை.

வேட்டையாடப் போதல்

இப்படியே வேட்டையாடி இளைப்புற்றிருந்த தசரதன் குதிரையை வேகமாய்ப் போகச் செலுத்திக் கொண்டு மற்றொருவருங் காணப்படாமற் போய்த்

**முனிபுதல்வனைக் கொலைபுரிதல்**

தமசை ஆற்றங்கரையை அடைந்தான். அக்கரையிலே பிரப்பங்கொடி மறைவிலே நின்று முனிபுதல்வன் ஒரு குடத்திலே நீர் மொண்டான். அந்த நீர் குடத்திற் புகும் சத்தம் களிற்றுயானையின் பிளிற்றொலி போலச் செவித்துளைகளிற் பட்டது. பட்டவுடனே ஆராய்வின்றிப் பாணம் ஒன்றை விட்டான். பாணம் போய் முனிபுதல்வனுடைய மார்பிற் பட்டது. முனிபுதல்வன் "அந்தோ! தந்தையே! தந்தையே! என்று சிந்தை நொந்து புலம்பி அழுதான். அவனோ குருடர்களாய தந்தை தாயரைக் காவிக்கொண்டுவந்து பக்கத்திலே வைத்துவிட்டுக் குடிக்க நீர் மொண்டு கொண்டு போக வந்தவன். யாது செய்வான்?

**புதல்வனோடு தந்தை தாயரிடம் போதல்**

அந்தப் புதல்வன் தந்தையே! தந்தையே! என்ற சத்தம் தசரதன் செவியிலே நுழைதலும் தசரதனும் அவ்வழியே போய் பாணந் தைக்கப் பட்டு இரத்தம் பெருகியோட நிலத்திலே வீழ்ந்து கிடக்கும் முனிபுதல்வனைக் கண்டு கவலைகொண்டு "நீ யாவன்? என்று கேட்டான். அவன் தன் வரலாறுகளைச் சொல்லித் தந்தை தாயர்கள் முன்னிலையிலே தன்னையும் கொண்டுபோய் விடவேண்டும் என்றும் வேண்டினான். தசரதனும் உடன்பட்டுக் குடத்தொடு புதல்வனையுங் கொண்டு தந்தை தாயர் முன்னிலையிற் சார்ந்தான். புதல்வன் வரக்காணாமல் வருந்திக் கொண்டிருக்கும் அவரிருவருந் தசரதனுடைய நடையொலியைத் தம் மகனுடைய நடையினொலி என்று கருதிச் சொல்லுவார்.

மைந்தா வருவாயெம் முயிர்வாழ்வே வருவாயால்
எந்தாய் வருவாயன் புடையிளையாய் வருவாய்நீர்
தந்தாவி யளிப்பா யெனவவனைத் தரைவையா
வந்தா ரவனன்னீர் கொடசும்போ டுமளித்தான்.

—இரகுவமிசம்

"மைந்தா! வருக. எம்முயிர் வாழ்வே! வருக. எம்பிதாவே! வருக. இளையோய்! வருக. நன்னீர் தந்து நலமுடன் காப்பாய்! வருக" என்று புலம்பினர். தசரதன் முனிபுதல்வனைத் தரையிலே வைத்துவிட்டு ஒன்றும் பேசாமல் நின்று குடத்துடன் நீரைக்கொடுத்தான். அவர்கள் இருவரும் ஐயங்கொண்டு ஒன்றும் பேசாது நின்று "நீர் தருகின்ற நீ யாவன்?" என, தசரதன் அஞ்சி நடுங்கி நடந்த காரியத்தைச் சொல்லுவான்.

**தசரதன் கூறல்**

"அப்பா! நமஸ்காரம், அன்னாய்! நமஸ்காரம். அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்க. நானே அயோத்திமாநகரை ஆளும் அரசன். தசரதன் என்னும் பெயருடையேன். இக்காட்டிலே வேட்டையாடலை விரும்பி வந்தேன். வேட்டையாடிக்கொண்டு தமசை யாற்றங் கரையிலே தனியே வந்தேன். உங்கள் புதல்வன் பிரப்பங்கொடி மறைவிலே கரையிலே நின்று குடத்திலே நீர் மொண்டான். குடத்திலே நீர் புகும் சத்தம் களிற்றியானையின் பிளிற்றொலியென்று விபரீதமாக விளங்கிப் பாணம் ஒன்று விட்டேன். உங்கள் புத்திரன் மார்பிலே பாணம் பட்டுப் பூமியில் வீழ்ந்தான். யான் யாது செய்வேன்? அவனை இங்கே எடுத்துக் கொண்டுவந்து இருக்கிறேன். இனி யுமது தொண்

டெல்லாம் நானே புரிவேன்" என்று சொன்னான். அவர்கள் இருவரும் இதனைக் கேட்டு நிலத்தில் வீழ்ந்து நெடுநேரம் புலம்பி, பின்னர்ச் சிறிது தெளிந்து மகனுடைய மார்பிலே தைத்த பாணத்தைக் கழற்றும்படி சொன்னார்கள். தசரதனும் கழற்றினான். கழற்றினவுடனே புத்திரனும் உயிர் துறந்தான். "இனி நானே உங்களுக்குப் புதல்வனாய் ஏவல்செய்து வாழ்வேன்" என்றான். முனிவன் அரசனை நோக்கி "அரசனே! நான் புத்திர சோகத்தினாலே இப்போது உயிர் விடுகிறேன். நீயும் என்னைப்போலப் புத்திர சோகத்தினாலே பொன்றக் கடவாய்" என்று சாபஞ் சொல்லித் தன்னைத் தகனஞ் செய்யும்படியுஞ் சொல்லி உயிர் துறந்தான். மனைவியும் உயிர் விட்டாள். அரசன் அவர்களைத் தகனஞ் செய்துவிட்டுத் தனது நகரியிற் போனான்.

---

## கக. புதல்வரைப் பெறுதல்

யாகந் தொடங்கல்

அந்தச் சாபம் தீங்கு பயப்பதாயினும் புத்திர சோகத்தினால் பொன்றக்கடவாய் என்றதினால், புத்திரனில்லாத தனக்குப் புத்திரன் கிடைக்குமென்று கருதியிருந்த தசரதனுக்குப் பதினாயிரம் வருடம் சென்றும் புத்திரன் உதித்திலன். தசரதன் கவலைகொண்டு பிதிரர் கடன் எப்படி நீங்குமென்று மனம் வருந்திக் கலைக் கோட்டுமுனிவர் முதலிய முனிசிரேட்டர்களை வருவித்துப் புத்திரகாம யாகத்தைச் செய்விக்கத் தொடங்கினான்.

அச்சமையத்திலே இராவணனால் வருந்திய தேவர்கள் திருப்பாற் கடலிற் புகுந்து பலவித துதிகளைக் கூறி நாரா

தேவர்கள் முறையிடல்

யணமூர்த்தியை நமஸ்கரித்தார்கள். நாராயணமூர்த்தி துதிகளாலே நன்கு மகிழ்ந்து தேவர்களை நோக்கி "தேவர்களே! நீங்களெல்லாம் உங்களுடைய பதவிகளிலே குறைவொன்றுமின்றி வலிமையோடும், வாழ்கின்றீர்களா?" என்று வினவினர். அப்பொழுது தேவர்கள் இராவணன் முதலிய இராக்கதர்கள் தங்களுக்குச் செய்துவரும் தீங்குகளை எல்லாம் தெளியச்சொல்லி "எங்களுக்கு இவைகளை நீக்கியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அதனை நாராயணமூர்த்தி கேட்டுச் சொல்லுவார்: "தேவர்களே! உங்களுக்குத் தீங்கு செய்யும் இராவணனை நான் வெல்லக் கருதியிருக்கிறேன். சர்ப்பங்கள் மேலேறிச் சூழவிருத்தலைச் சந்தனமரம் பொறுத்தல்போல இந்த நாள்வரையும் பொறுத்து வந்தேன். அந்த இராவணன் அருந்தவஞ் செய்து பிரமாவிடத்தில் பிரியமான வரம் பெற்றபோது மானிடர்களை ஒருபொருளாய் மதியாமல், தேவர்களாலே கொல்லப்படாமையை வேண்டிக்கொண்டான். ஆதலால் மானுட லோகமாகிய பூமியிலே தசாதராசனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து போர்செய்து போர்க்களத்திலே இராவணனைக் கொலைபுரிவேன். ஆகாயத்திலே வருகின்ற அவனுடைய விமானத்துக்கு அஞ்சவேண்டாம்" என்று சொல்லி மறைந்தருளினர்.

புத்திரர் பிறத்தல்

செய்யத் தொடங்கிய புத்திரகாம யாகமும் செவ்வனே செய்யப்பட்டது. அந்த யாகத்திலே பூதமொன்று பாயசமாகிய அவிப்பாகத்தைக் கைகளில் ஏந்திக்கொண்டு வெளியிற் புறப்பட்டது. அந்தப் பாயசத்தைத் தசரதன் வாங்கி இரண்டாகப் பிரித்துக் கோசலை கைகேயி

என்னும் தேவியரிருவருக்கும் கொடுத்தான். தேவியரிருவரும் தங்கள் தங்கள் பாகங்களிலே பாதி பாதியெடுத்து மற்றத் தேவியாகிய சுமித்திரைக்கும் கொடுத்தார்கள். பாயசத்தையுண்ட தேவியர் மூவரும் கருப்பவதிகளாயினர். கோசலையுடைய கருப்பத்திலே நாராயணமூர்த்தி புகுந்து ஒரு புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தார். அழகுடைமை நோக்கி அப்புத்திரன் இராமன் என்னும் பெயரிடப்பட்டான். இராமன்—அழகன். பின்னர்க் கைகேயி என்பவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். அவனுக்குப் பரதன் என்னும் பெயர் இடப்பட்டது. பரதன் — போஷிப்பவன். அதன்பின் சுமித்திரை என்பவள் புத்திரர் இருவரைப் பெற்றாள். அவருள் ஒருவனுக்கு இலக்குமணன் என்னும் பெயர் இடப்பட்டது. இலக்குமணன் — செல்வமுடையவன். மற்றவனுக்குச் சத்துருக்கினன் என்னும் பெயர் இடப்பட்டது. சத்துருக்கினன் — சத்துருவைக் கொல்லுவோன். பூமியிலே, பஞ்சம், பசி, நோய் முதலியனவெல்லாம் அஞ்சியோடின. சாதக கருமம் முதலிய கிரியைகள் எல்லாஞ் செய்யப்பட்டன.

புத்திரர் நால்வரும் நல்லொழுக்கமும் நற்குணமும் ஒற்றுமையுமுடையராய் வளர்ந்தார்கள். ஆயினும் இராமனும், இலக்குமணனும் ஒருவரையொருவர் பிரியாது சஞ்சரித்தனர். அப்படியே பரதனும் சத்துருக்கினனும் ஒருவரையொருவர் பிரியாது சஞ்சரித்தனர். மைந்தருடைய கல்வியையும் ஒழுக்கம் முதலியவைகளையும் நன்குணர்ந்த தந்தையாகிய தசரதன் நான்கு புயங்களாலே நாராயணமூர்த்தியும் நான்கு கொம்புகளினாலே ஐராவத யானையும் விளங்குவதுபோல இனிது விளங்கினான்.

## ௧௨. வேள்வி காத்தலும் விவாகஞ் செய்தலும்

இப்படி விளங்கும் நாட்களிலே குசிகருடைய மரபிலே பிறந்த விசுவாமித்திரர் தசரதனிடத்திலே வந்து தமது யாகத்தை இராக்கதர்கள் செய்யும் இடையூற்றினின்றுங் காக்கும்படி இராமபிரானைத் தம்மொடு அனுப்பும்படி கேட்டார். தசரதன் மறுத்தும் வாயாமையாலே வருத்தமுற்றுப் பின்னர் வசிட்டர் வார்த்தையினாலே உடன்பட்டு இராமபிரானையும் இலக்குமணனோடுஞ் சேர்த்து அவருடன் போக அனுப்பினன். செல்லும் வழியிலே சிறிது களர்ச்சியுற்ற அவர்கள் இருவருக்கும் பெலம், அதிபெலம் என்னும் மந்திரங்கள் இரண்டையும் உபதேசித்துக் களைப்பு நீக்கி விசுவாமித்திரர் அழைத்துச் சென்றார். செல்லும் போது தாடகையென்னும் அரக்கி இருக்குங் காடு வந்தது. காடு வந்தவுடனே தாடகை வந்து போராடத் தொடங்கினள்.

**விசுவாமித்திரரோடு போதல்**

தாடகையுடைய வலிமையையுங், கொடுமையையும் இராமபிரானுக்கு விசுவாமித்திரர் எடுத்துச் சொன்னார். இராமன் கேட்டு "இவளோ ஒரு பெண்; இவளை எப்படிக் கொல்லலாம்" என்று சற்றே தாமதித்தார். தாமதஞ்செய்து நின்ற இராமபிரானுடைய கருத்தை இனிதுணர்ந்த விசுவாமித்திரர் எத்தனையோ கதைகளுங் காரணங்களும் எடுத்துச் சொல்லிக் கொல்லத்தக்கவள் என்பதை வலியுறுத்தினார். அதனைக்கேட்ட இராமபிரானும் "ஐய! நின்னுரை வேதம் எனக் கொண்டு செய்

வன் ” என்று பாணம் ஒன்றெடுத்துத் தாடகையின் மார்பிலே தைக்கும்படி விட்டார். பாணம் போய்த் தைத்துத் தாடகையின் மார்பையும் ஊடுருவி அப்பாற் சென்றது. தாடகையும் பூமியிலே வீழ்ந்திறந்தாள். பின்னர்த் தாடகையின் புத்திரர்களாகிய மாரீசன், சுவாகு என்னும் இருவருஞ் சேனைகளோடும் சீறிவந்து போராடினார்கள். அவருள்ளே மாரீசன் என்பவன் சுரப்பிரம் என்னும் பாணத்தினாலே துண்டமாயினன். சேனைகளையெல்லாம் இலக்குமணன் சென்று கலக்கிப் போராடித் தொலைத்துவிட்டான்.

இராக்கதரெல்லாந் தொலைந்தபின் விசுவாமித்திரர் இராம லக்குமணர்களைப் பாராட்டி வாழ்த்திப் பாது காவலாக வைத்து இடையூறின்றி யாகத்தையும் இனிது முடித்தார். அப்போது மிதிலைநகர அரசனாகிய சனக ராசன் தனது யாகத்துக்கு வரும்படி விசுவாமித்திரரை அழைத்தான். விசுவாமித்திரரும் இராம லக்குமணர்களையுங் கூட்டிக்கொண்டு மிதிலை நோக்கிச் சென்றார்.

**அகலிகை சாபந் தீர்தல்**

மிதிலைமாநகரின் அருகிலே செல்லும்போது கல்லொன்று வழியிலே கிடத்தலை இராமபிரான் கண்டு தமது திருவடியை அதன் மேலே வைத்தார். வைத்தவுடனே அந்தக் கல்லானது ஒரு பெண்ணுருவாய் வந்து முன்னே நின்றது. இஃது யாதுகாரணமோ என்று இராமபிரான் இறும்பூது எய்தி விசுவாமித்திரரை வினவினார். விசுவாமித்திரர் சொல்லுவார்: “இந்தப் பெண்ணே கௌதமமுனிவருடைய இல்லக்கிழத்தி; அகலிகை என்பது இவளுடைய பெயர். இந்திரனுடைய தீயொழுக்கத்திலே சிந்தை

உடன்பட்டமையாற் 'கல்லுருவாகுக' என்று கௌதம முனிவராற் சபிக்கப்பட்டுக் கல்லுருவம் வரப்பெற்று இன்றுவரையும் இங்கே கிடந்தாள். இப்போது உமது காலிற் பொடிபட்டுக் கல்லுருவம் நீங்கிப் பெண்ணுருவாயினள்" என்றார். இராமபிரான் அவளை வணங்கி அழைத்துக்கொண்டுபோய்க் கௌதம முனிவரிடஞ் சேர்த்துவிட்டு விசுவாமித்திரர் இலக்குமணன் என்னும் இருவரோடுஞ் சேர்ந்தார்.

**சனகராச னுபசரித்துக்கூறல்**

பின்னர் அந்த மூவரும் வெளிகொண்டு சென்று மிதிலைமாநகரை அடைந்தார்கள். விசுவாமித்திரரின் வருகையைச் சனகராசன் கேள்விப்பட்டுச் சிறிது தூரம் வந்து புதல்வரோடும் அழைத்துக்கொண்டு போய் ஆசனங்களிலே இருத்தித் தனது யாகத்தையுங் கிரமமாகச் செய்து முடித்துவிட்டு வேத்தவையிலே வந்து வீற்றிருந்தபோது இராமபிரானையும் இலக்குமணனையுங்கண்டு "இவர்கள் இருவரும் யாவர்?" என்று விசுவாமித்திரரை வினவினன். அவர்களுடைய ஆண்மை, கல்வி, அருள், குலம், பெலம், வலிமை, தலைமை, பெருமை முதலியவைகளையெல்லாம் வித்தாரமாய் எடுத்து விசுவாமித்திரர் சொன்னார். சனகராசன் கேட்டு இராமபிரானுடைய இளமையையும், அழகையும் நோக்கித் தனது புத்திரி சீதையுடைய விவாக காரணவில்லையும் நோக்கிச் சொல்லுவான்:

"இந்த இளம்பிள்ளை அந்த வில்லினை எப்படி வளைப்பான்? அந்த வில்லோ சிவபிரான் கொடுத்தது. எனது புத்திரியாகிய சீதாபிராட்டி உழவுச்

**வில்லு வளைத்தல்**

சாலிலே தோன்றியபோதே ஒருங்கு தோன்றியது. இந்த வில்லை வளைத்தவனே இந்தச் சீதைக்கு நாயகனுவான் என்னும் நியமமும் உண்டு. சீதையைக் காதலித்து இங்கேவந்த அரசருள்ளே எத்தனையோ பலர் வில்லை நோக்கியவுடனே மெல்லச் சென்றனர். எத்தனையோ பலர் வில்லை அசைக்கத்தானும் முடியாராய் அப்புறம் போயினர். எத்தனையோ பலர் இந்த வில்லின் அருகே அன்றுமுதல் இன்றையளவும் வாராமல் மறைந்தார். இந்த வில்லை வளைத்து நாணேற்றிச் சீதையை மணம் புணர்தல் இலகுவான காரியமன்று" என்றான்.

விசுவாமித்திரர் கேட்டு "வில்லின் வலிமை பெரியதாயினும் இராமபிரானுடைய புயபலத்திலே அறியப்படும்" என்றார். சனகராசன் பக்கத்திலே நின்ற ஏவலாளர் பலரை ஏவி அந்த வில்லை எடுப்பித்து அங்கே வைத்தான். விசுவாமித்திரர் இராமபிரானை நோக்கினார். அவர் இலகுவிலே அந்த வில்லை எடுத்து வளைத்து முரித்தார். சீதைக்கு என்றும் மணமில்லை என்றிருந்த சனகராசனும் மனம் மகிழ்ந்தான்.

**விவாகஞ் செய்யப்படுதல்**

சீதையின் விவாகத்தின்பொருட்டுச் சாலைகளையும் நகரியையும் சிறப்பாக அலங்காரஞ் செய்து வசிட்டர் முதலிய முனிவர்களையும், தசரதன் முதலிய அரசர்களையும் மற்றைய அரசர்களையும் பிறரையும் தூதர் வாயிலாக விவாக சபைக்கு வரும்படி செய்தான். யாவரும் வந்து சேர்ந்தனர். அவர்கள் முன்னிலையிலே கிரியைகளையெல்லாம் கிரமமாகச் செய்வித்து அக்கினிசான்றாகப் புத்திரியாகிய சீதாபிராட்

டிபை நீர்த்தாரைவிட்டுக் கொடுத்தான். அதன்பின் ஊர்மிளை என்னும் கன்னிகை இலக்குமணனாலே விவாகஞ் செய்யப்பட்டாள். அதன்பின் மாண்டவி, சுருதகீர்த்தி என்னும் மகளிர் இருவரும் பரதனாலும் சத்துருக்கனாலும் விவாகஞ்செய்யப்பட்டார். விவாக சபைக்கு வந்தவர்களை சனகராசன் உபசாரஞ்செய்தனுப்பினான். தசரதன் முதலியோர் சனகராசன் செய்த உபசாரத்தோடு அங்கே தங்கிச் சிலநாட் சென்றபின் புறப்பட்டுப் போயினர். இராமபிரான் முதலியோரும் பத்தினிகளோடு அவர்க்குப்பின்னை போயினர். சனகராசனும் அவர்களோடு வெகுதூரஞ்சென்று வழிவிட்டுத் திரும்பி வந்தான்.

**பரசுராமர் தடுத்தல்**

வில்லு முரித்த செய்தியைக் கேட்டுப் பொறாமை கொண்டிருந்த பரசுராமர், அவர்கள் செல்லும் வழியில் கோபாவேசத்தோடு இராமபிரானுக்கு எதிரே வந்தார். பரசுராமனுடைய பராக்கிரமத்தையும், தனது நிலையையும், தன் புதல்வருடைய இளமை நிலையையும் நோக்கி யாதாய் முடியுமோவென்று தசரதன் கவலையுற்று நின்றான். பரசுராமர் இராமபிரானை அணுகி "என்பிதாவைக் கொலைசெய்த சத்திரிய சாதியை இருபத்தொரு தலைமுறையுங் கொலைசெய்து கோபந் தணிந்திருந்தேன். இப்பொழுது சீதாபிராட்டியின்விவாக காரணமாய் இருந்த திரியம்பகம் என்னும் வில்லை வளைத்து முரித்தனை என்ற செய்தி நித்திரைகொள்ளும் சர்ப்பத்தைத் தட்டி எழுப்புவதுபோல என்னை எழுப்பிற்று. எனக்குரிய இராமன் என்னும் நாமம் உனக்கும் வழங்குகின்றது. எனக்குப் பகைவராய் இருவர் உளர்,

அவருள்ளே என்பிதாவின் ஓமத்துக்குப் பால்கொடுக்கும் காமதேனுவின் கன்றைக் கவர்ந்துசென்ற கார்த்தவீரியார்ச்சுனன் ஒரு பகைவன். நீ ஒரு பகைவன். நீயோ என்னுடைய கீர்த்தியைக் கெடுக்க முயல்கின்றாய். நீ முரித்த வில்லு வலிமையற்றது. இந்த வில்லை வளைத்து நாணேற்றிப் பாணந் தொடுப்பாயாயின், என்னை வெற்றிகொண்ட வீரனாவாய்" என்றார்.

இதனைக்கேட்ட இராமபிரான் அச்சமின்றி அவர் முன்னே நின்று அந்த வில்லை வாங்கி வளைத்து நாணேற்றிப் பாணமுந் தொடுத்துப் பரசுராமரைப் பார்த்து "வேதியராய் நிற்கும் உம்மைக் கொலைசெய்தல் எனக்குத் தகுதியன்று. இப் பாணத்தினாலே நீர் செல்லுங் கதியை அழித்துவிடுதலா? யாகத்திலே நீர் பெற்றுக் கொண்ட சுவர்க்கவழியை அழித்துவிடுதலா? உமது சம்மதம் யாது?" என்றார். "தீர்த்த யாத்திரையை விரும்பும் என்னுடைய கதியையே காத்துக்கொள்ளும்" என்று பரசுராமர் சொல்லி "உம்மை விட்டுணுவின் அவதாரம் என்று அறிந்துகொண்டேன்" என்றார். இராமபிரானும் "அப்படியே ஆகுக" என்று பாணத்தை விட்டுப் பரசுராமருடைய சுவர்க்க கதியைத்தடுத்து அவருடைய பாதங்களை வணங்கினார். பரசுராமரும் இராமபிரானை நோக்கி, "நீர் இலக்குமணனோடுஞ் சென்று தேவகாரியத்தை முடிக்கக்கடவீர்" என்று வாழ்த்துரையுஞ் சொல்லிச் சென்றார். தசரதன் முதலிய யாவரும் இராமபிரானைப் புகழ்ந்து தழுவி அயோத்திமாநகரிற் போயினர்.

பின்னர்த் தசரதன் தனது வயோதிக நிலையையும், அரசியலுக்கேற்ற பக்குவமுடைய இராமபிரானுடைய

**வரங் கொடுத்தல்** நிலையையும் நோக்கி மந்திரிமாரோடுஞ் சிந்தைசெய்து இராமபிரானுக்கு முடிசூட்டி அரசியலில்வைத்தற்கு நாளும் நியமித்தான். இதனை அறிந்த கூனி என்னுங் கொடியவளாற் கைகேயி ஏவப்பட்டு தசரதனிடம் போய்ச் "சம்பராசுரயுத்தத்திலே தேரின் அச்சாணி முறிந்தபோது அச்சாணியாகக் கைவிரலைவைத்து நான் தேர் செலுத்திய செய்தியை நீர்கண்டு மகிழ்ச்சி கொண்டு 'நீ விரும்பிய வரங்கள் இரண்டு கேட்டபோது தருவேன்' என்றீரே! அவ்வரங்களை இப்பொழுது தாவேண்டும்; அவற்றுள்ளே ஒருவரம், வருடம் பதினான்கு வனத்திற்சென்று வசிக்கும்படி இராமபிரானுக்கு அனுமதி செய்தல். மற்றவரம் அரசியலைப் பரதனுக்குக் கொடுத்தல்" என்றாள். தசரதனும் 'யாது செய்வேன்?' என்று மனம் வருந்தி "வரமிரண்டும் தந்தேன்" என்றான்.

---

## கரு. இராமபிரான் வனவாசம்

**வனத்திற்சென்று வாசஞ்செய்தல்** இந்த வரங்களைத் தந்தையார் கொடுத்தார் என்பதைக் கேள்விப்பட்ட இராமபிரான் இலக்குமணன், சீதாபிராட்டி என்னும் இருவரோடும் நகரியை விட்டுப் புறப்பட்டுச் சென்று தண்டகாரணியத்திற்பிரவேசித்தார். இராமபிரான் வனவாசஞ் சென்றார் என்றதைத் தந்தையாகிய தசரதன் கேட்டு உயிர் துறந்தான். நகரமும் நாடும் கவலைகொண்டன. கேகயநாட்டிற் போயிருந்த பரத சத்துருக்கர்களும் மந்திரிமார் அனுப்பிய தூதரால் வந்தனர்.

**பரதன் இராமபிரானிடம் போதல்**

பரதன் தந்தையின் மரணந் தாயாற் சம்பவித்தது என்பதை அறிந்து தாயையுங் கடிந்துகூறி, அரசியலையும் வெறுத்துவிட்டுக் காட்டிற் போய்ச் சித்திரகூடத்திலே வாசஞ் செய்த இராமபிரானைக்கண்டு தந்தையின் மரணத்தையும் அறிவித்து நாட்டிலே வந்து அரசியலை நடாத்தும்படி கேட்டான். இராமபிரான் காட்டினின்றுந் திரும்பி நாட்டிலே வந்து அரசியல் நடாத்தினால் தந்தை சொற்குப் பங்கம் வரும் என்று சொல்லி மறுத்து உரையாடி "இந்தப் பாதுகைகளைக் கொண்டுபோய் எனக்குப் பிரதியாக வைத்து நீயே அரசியலை நடாத்துதி" என்றுசொல்லிப் பரதனை அனுப்பினான். பரதனும் திரும்பி வந்து அயோத்திமா நகருக் கருகிலுள்ள நந்திக்கிராமத்திலே அந்தப் பாதுகைகளை இராமபிரானுடைய அடைக்கலப் பொருள் போல வைத்து அரசியலை நடாத்தினான்.

இராமபிரான் கந்தமூல பலாதிகளை உண்டுகொண்டு சித்திரகூட மலையிலே சிலநாள் தங்கி அங்கேவந்து மூக்கினாற் கொத்திச் சீதைக்குத் துயர்புரிந்த காகாசுரனுடைய கண்ணை நாணற்புல்லைப் பாணமாகத் தொடுத்துக் கெடுத்துவிட்டு, நகரிக்குச் சமீபமாகிய இவ்விடத்தில் இன்னும் இருந்தாற் பரதன் முதலியோர் பின்னும் வருவார் எனக் கருதி அப்பாற் போய் அத்திரி முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்தார். அங்கே முனிவர் மனைவியாகிய அநசூயை அணிகலங்களாலே சீதையைப் பெரிதுஞ் சிறப்பித்தாள். அப்பால் அகத்தியருடைய ஆச்சிரமத்திலே போய் அவராலும் உபசரிக்கப்பட்டு அப்பாற் போய் பஞ்சவடி என்னும் இடத்தை அடைந்தார்கள்.

சூர்ப்பநகை வருதல்

அந்தப் பஞ்சவடியிலே வசிக்கும்போது இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை என்னும் இராக்கதப் பெண் வந்து தனக்கு நாயகனாக வரும்படி இராமபிரானைக் கேட்டாள். இராமபிரான் "யான் மனைவியோடு வசிக்கின்றேன்" என்று சொல்லி மறுத்துரையாடித் துரத்தினார். பின்னர்ச் சீதையிடம்போய் சொல்லத்தகாத சொற்களையுஞ் சொல்லி நெருங்கினாள். அதனைக்கண்ட இலக்குமணன் அவளுடைய மூக்கு முதலியவைகளை அறுத்துத் துரத்தினான். அவள் போய் அங்கிருந்த கரன் முதலிய இராக்கதர்களுக்கு இந்தச் செய்தியை அறிவிக்க, அவர்கள் சேனைகளோடும் வந்து போராடி இவர்களாற் கொல்லப்பட்டார். பின்னர்ச் சூர்ப்பநகை இச்செயல்களையெல்லாம் இராவணனிடம அறிவித்தாள். சீதையின் அழகு முதலியவைகளையும் விசேடமாகச் சொன்னாள்.

இராவணன் சீதையைத் தான் கவரவிரும்பி மாமனாகிய மாரீசனைத் தனக்குத் துணைசெய்யும்படி கேட்டான். மாரீசனும் பொன்மயமான ஒரு மானின் வடிவங்கொண்டு சீதைக்கு முன்னே சென்று உலாவினான். சீதை அதனைக்கண்டு ஆசைகொண்டு "இதனைப் பிடித்துத் தரல்வேண்டும்" என்று இராமபிரானை வேண்டினாள். இராமனும் அதனைத் தொடர்ந்து வெகுதூரஞ் சென்றும் அகப்படாமையால் மாயமான் என்று பாணந் தொடுத்தான். அந்தமானும் அம்புபட்டுச் "சீதா லக்குமணா அபயம்" என்று குளறி வீழ்ந்தது.

அந்தச் சொல்லைச் சீதைகேட்டு 'யாதோ அபாயம்' என்று இலக்குமணரையும் அனுப்பித் தனியே இருந்

தாள். அச்சமயத்தில் இராவணன் வந்து சீதையைக் கவர்ந்து சென்றான். செல்லும் வழியிலே மறித்துப் போராடிய சடாயுவென்னும் கழுகுப் பறவையையுஞ் சிறகரிந்து கீழே விழுத்திவிட்டு, சீதையைக் கொண்டு போய் அசோகவனத்தில் வைத்தான். இராமபிரானும் இலக்குமணனும் திரும்பிவந்து சீதையைக் காணமற் புலம்பித் தேடிச் சென்றார்கள். செல்லும் வழியிலே நிகழ்ந்த செய்தியைத் தங்களுக்குச் சொல்லியபின் இறந்த சடாயுவைத் தகனஞ் செய்துவிட்டு அப்பாற் போய்க் கிட்கிந்தமலையை அடைந்தார்கள்.

---

## கச. அனுமான் தூதும் இராவண சங்காரமும்

அனுமான் அடைதல்

கிட்கிந்தமலையிலே குரங்குகளுக்கரசனாகிய வாலிக்குப் பயப்பட்டு வந்திருந்த குரங்குகளாகிய அனுமானும் சுக்கிரீவனும் இராமபிரானோடும் இலக்குமணனோடும் வந்து கூடினார்கள். இராமபிரான் சுக்கிரீவன்பொருட்டாக வாலியைக் கொன்று சுக்கிரீவனை அரசனாக்கினார். சுக்கிரீவனும் இராமபிரான் பொருட்டாகச் சீதாபிராட்டியைத் தேடமுயன்று குரங்குச் சேனைகளை நான்கு திசைகளுக்கும் அனுப்பினான். அனுமான் தென்கடலைக் கடந்து இலங்கையிலே போய் அசோகவனத்திலே சீதையைக் கண்டு பேசி அங்கே பல வீரச் செயல்களையுஞ் செய்து இராவணனையும் நிந்தித்துத் திரும்பிவந்து சீதாபிராட்டியின் செய்திகளை இராமபிரானுக்குச் சொன்னான்.

இராவணனை இலங்கையிற் சென்று கொல்லக் கருதிச் சுக்கிரீவன் அனுமான் முதலிய குரங்குகளைத் துணையாகக் கொண்டு, தென்கடலிலே சேதுவாகிய அணையையுங் கட்டுவித்து, அவ்வணை வழியாகச் சென்று இலங்கையிற்போய் இராவணனோடும் போர் புரியத் தொடங்கினர். குரங்குச் சேனைகள் போய் இராவணனுடைய கோட்டையை வளைந்தன. இருபாலார்க்கும் கடிய யுத்தம் நிகழ்ந்தது. கும்பகர்ணன் இந்திரசித்து முதலிய இராக்கதரெல்லாரும் கொல்லப்பட்டார்கள். இராமபிரானுடைய பிரமாஸ்திரத்தினல் இராவணனுங் கொல்லப்பட்டான். இராமபிரான் அக்கினியிற் பிரவேசித்துக் கற்புநிலை காட்டிய சீதாபிராட்டியையும் அழைத்துக்கொண்டு இலக்குமணன் சுக்கிரீவன் முதலியோரோடும் இலங்கையினின்று திரும்பிப் புட்பக விமானத்திலேறி அயோத்திமாநகருக்குப் புறப்பட்டார்.

இராவணன் போர்

---

## கரு. அயோத்திக்கு மீளலும் அரசு புரிதலும்

புட்பக விமானத்திலே செல்லும் இராமபிரான் வழியிற் காணுஞ் சிறப்புக்களைச் சீதைக்குக் காட்டிச் சொல்லுவார். "சீதையே! சமுத்திரத்திலே திமிங்கலந் துள்ளி விளையாடுதலைப் பார். கடற்கரையிலே தோன்றும் கமுகஞ் சோலையைப் பார். என்மனம்போலச் செல்லும் எனது விமானத்தைப் பார். அது சிலவிடத்திலே தேவர் செல்லும் வழியாற் செல்வதைப் பார். சிலவிடத்திலே காட்டு வழியாற் செல்வதைப் பார். சில

வழிச் சிறப்பு

விடத்திலே பறவைகள் செல்லும் வழியாற் செல்வதைப் பார். இங்கே உன்னுடைய காலிற் சிலம்பு வீழ்ந்த இடத்தையும் பார். பல குவளைகள் மலர்ந்திருக்கும் பம்பை வாவியையும் பார். பஞ்சவடியிலே கோதாவரி யாற்றங்கரையிலே நாங்கள் இருந்த பிரப்பங்கொடி வீட்டையும் பார். சாதகர்ண முனிவருடைய சலக்கிரீடை வாவியையும் பார். இங்கே தோன்றும் சுதீக்கண முனிவருடைய பர்ணசாலையையும் பார். அத்திரிமுனிவருடைய ஆச்சிரமத்தையும் பார். இங்கே கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்றுங் கூடுகின்ற சங்கமந் தோன்றுதலையும் பார். எதிரே வருகின்ற சரயுநதியையும் பார்."

**அயோத்தியடைதல்**

இராமபிரான் இப்படியே பாதையிலே தோன்றுஞ் சிறப்புக்களைச் சீதைக்குக் காட்டிச் செல்லும்போது அயோத்திமாநகரியும் அணிமையாய் வந்தது. நந்திக்கிராமத்தில் இருந்த பரதனும் குருவாகிய வசிட்டமுனிவரோடும், மந்திரிமாரோடும், சேனைகளோடும், எதிர்கொண்டு வந்தான். இராமபிரானும் விமானத்தினின்றும் இறங்கி வசிட்டமுனிவரை வணங்கித் தம்மை வணங்கிய பரதனையுந் தழுவினர். இராமபிரானை மந்திரிமார்களும் வணங்கினர். இலக்குமணன் பரதனை வணங்கினன். சுக்கிரீவன் முதலியோரும் இராமபிரானலே இன்னர் என்று பரதனுக்கு அறிவிக்கப்பட்டார். பின்னர் அந்தப்புரத்திலிருந்த தாய்மாருங் கண்டு கொண்டாடினர். அதன் பின்னர் இராமபிரான் பட்டாபிஷேகம் பெற்று அரசியல் செய்யத் தொடங்கினர். அங்கே அகத்தியர் முதலிய முனிவர்கள் வந்து கொண்டாடி இராவணனுடைய வரலாற்றை இராமபிரானுக்கு அறிவித்துச் சென்றார்கள்.

விபீடணனும் சுக்கிரீவன் முதலியவர்களும் இராமபிரானுடைய உபகாரங்களையும் பெற்றுச் சென்றார்கள்.

சனங்களெல்லாம் இராமபிரானுடைய இராச்சிய பரிபாலனத்தை வியந்து பேசி அவரைத் தங்கள் பிதா என்று கருதினார்கள். இராமபிரான் தானுஞ் சீதாதேவியுந் தண்டகாரணியத்திலே அனுபவித்த துன்பங்களையெல்லாம் இன்பமாகக் கொண்டு வாழ்ந்தார்கள். சில நாள் சென்றபின் சீதை கருப்பவதியாயினள். கருப்பவதிகள் விருப்பங்கொள்ளும் பொருள்களை யெல்லாம் பெற்றநுபவித்தபின் கங்காநதிக் கரையிலுள்ள தபோவனங்களுக்குப் பின்னும் போக விரும்பினாள்.

**சீதையை விலக்குதல்**

ஒருநாள் இராமபிரான் அங்கே உலாவி வரும் போது பத்திரன் என்னும் ஒற்றனை நோக்கி "ஊரிலே யாது பேசுகின்றார்கள்?" என்று வினவினார். பத்திரன் இராமபிரானை நோக்கி, "இராவணன் வீட்டிலே சிலநாளிருந்த சீதையைப் பின்னும் ஏற்றுக்கொண்டீர் என்பதொன்றொழிந்த உமது செயல்களை எல்லாம் உலகம் துதிக்கின்றது" என்றான். இதனைக்கேட்ட இராமபிரான் நாணி மனம் வருந்தி தம்பியர்களை வருவித்துச் சொல்லுவார்: "இந்தப் பழிவார்த்தை என்னை நீங்குவதெப்படி? சீதாதேவியை நீக்கிவிட நினைக்கின்றேன். என் கருத்தை நீங்கள் தடுத்தல் முறையன்று; சீதாதேவியும் தபோவனங்களைக் காண விரும்புகிறாள். அவளை வான்மீகி முனிவருடைய ஆச்சிரமத்திலே கொண்டுபோய் விட்டு வருக" என இலக்குமணனுக்குக் கட்டளையிட்டார். இலக்குமணனும் தேரிலேற்றி அவளைக் கொண்டுபோய் வான்மீகிமுனிவருடைய ஆச்சிரமத்

தில் விட்டான். சீதை கவலைகொண்டு இலக்குமணனிடம் பல வார்த்தைகளையும் சொல்லிவிட்டு வான்மீகி முனிவரைக் கண்டு வணங்கினாள். வான்மீகி முனிவரும் சற்புத்திரப்பேறு கிடைக்குமென்று வாழ்த்தி “என்னுடைய இந்த ஆச்சிரமத்தை உனது தந்தை வீடுபோலச் சிந்தைசெய்து யாதொரு பயமுமின்றி இங்கே வசிப்பாயாக” என்றார். சீதையும் அங்கே யாவராலும் உபசரிக்கப்பட்டு வாழ்ந்தாள். இலக்குமணன் நகரிற் போய்ச் சீதையின் செய்தியை இராமபிரானுக்குச் சொன்னான். இராமபிரான் சீதையை நினைந்து வருந்தி ஒருவாறு துயரை அடக்கிக்கொண்டு அரசியலை நடத்தினார்.

**இலவணன் கதை**

அப்போது யமுனையாற்றங்கரையிலே வாசஞ்செய்யும் முனிவர்கள் இராமபிரானிடம் வந்து “இராவணன் தங்கை சூர்ப்பநகி புதல்வனாகிய இலவணன் என்பவன் எங்கள் யாகக் கிரியைகளை அழிக்கின்றான். அவனைக் கொலைபுரிந்து எங்கள் யாகங்களைப் பாதுகாத்தருள வேண்டும்” என்று கேட்டார்கள். இராமபிரான் சத்துருக்கனை அழைத்து அவனைக் கொலைசெய்து வரும்படி கட்டளையிட்டார். சத்துருக்கன் தேரிலேறி முனிவர் காட்டும் வழியாற் சென்று வழியிலே எதிர்ப்பட்ட வான்மீக முனிவருடைய ஆச்சிரமத்திலே ஓரிரவு தங்கினான். வான்மீக முனிவரும் உபசரித்து இருத்தினார். அப்போது சீதாதேவியும் புதல்வர் இருவரைப் பெற்றாள். அதனைக் கேட்டு மகிழ்ச்சிகொண்டு முனிவரது அனுமதியும் பெற்று வழிக்கொண்டு போய் இலவணனுடைய நகரியை அடைந்தான். இலவணன் கண்டு கோபங் கொண்டு “நீ யாவன்?” என்று வினவி,

"போசனம் அகப்படாமற் பசியால் வருந்தும் எனக்கு நல்ல விதியினாலே இன்று போசனமாக வந்திருக்கிறாய்" என்று ஒரு மரத்தைப் பிடுங்கிச் சத்துருக்கன் மேலே எறிந்தான். சத்துருக்கன் ஓரம்பினாலே அதனைத் துகளாக்கப் பின்னொரு கல்லை எடுத்தெறிந்தான். அதனையும் அம்பினாலே துகளாக்கிப் பின் ஓரம்பினாலே அவனைக் கொன்று பூமியிலே வீழ்த்தினான். தேவர்கள் பூமாரி சொரிந்தார்கள். சத்துருக்கனும் அங்கே யமுனையாற்றங்கரையிலே ஒரு நகரந் தாபித்து வசித்தான். அந்நகரின் பெயர் மதுரை. சிலநாள் வசித்துத் தன் புத்திரர்கள் வெகுசுருதன், சுவாகு என்பவருக்கு மதுரையையும் விதிசையையும் கொடுத்தான்.

சீதாதேவி பெற்ற பிள்ளைகளாகிய குசன், இலவன் என்னும் இருவரும் வான்மீகிமுனிவருடைய அருளினாலே வேதங்களையும் வேதாந்தங்களையும் படித்துக் கொண்டார்கள். வான்மீகிமுனிவருடைய இராமாயணத்தையும் படித்துக்கொண்டார்கள். அதனைச் சீதாபிராட்டியும் கேட்டு மகிழ்ந்தாள். சத்துருக்கன் பின்னும் வான்மீகிமுனிவருடைய ஆச்சிரமத்திலே வந்து அந்தப் புத்திரர்கள் படிக்கும் பாட்டுகளையும் கேட்டுக் கொண்டு இராமபிரானிடம்போய் இலவணனைக் கொன்ற செய்தியை அறிவித்தான். இராமபிரான் கேட்டு மகிழ்ச்சியுற்றார்.

பின்னர் இருபிறப்பாளன் ஒருவன் அகாலத்திலே இறந்துபோன தனது குமாரனை எடுத்துக்கொண்டு

சம்புகன் இராமபிரானுடைய அரண்மனை வாயிலிலே வைத்துப் "பூமிதேவியே! தசரத மஹாராசாவினின்றும் விலகி இராமபிரானுடைய

கையிலகப்பட்டுக் கவலை அனுபவிக்கிறாய்; அகாலமரணமில்லாத இந்த இராச்சியத்தில் அகாலமரணம் எப்படிச் சம்பவித்தது?" என்றான். இராமபிரான் வெட்கமுந் துக்கமுமுற்று, சற்றே இரு என்று அவனை நிறுத்திவிட்டுத் தனது நினைவின்படி வந்த புட்ப விமானத்திலே ஆயுதங்களையும் எடுத்துக்கொண் டேறிப் புறப்பட்டார். அப்போது இராமபிரானை நோக்கி "உம்முடைய சனங்களிடத்தில் வருணத் தருமத்திற்கு மாறான குற்றம் இருக்கின்றது. அதனைத் தேடிக் கண்டு நீக்கிவிடவேண்டும்" என்று அசரீரி கூறிற்று. அதனைக் கேட்ட இராமபிரான் விமானத்தோடும் பல திக்கிலுஞ் சென்று தேடி ஒரு மரக்கொம்பிலே தலைகீழாய்த் தவஞ்செய்யும் சூத்திரனாகிய சம்புகன் என்பவனைக் கண்டார். இவன் செய்யும் தவமே அந்த அகாலமரணத்துக்குக் காரணம் என்று கருதி அவன் தலையை விழுத்திவிட்டு அகத்திய முனிவர் கொடுத்த மாலையையுந் தரித்துக்கொண்டு திரும்பிவந்து இறந்துகிடந்த அந்தப் பிராமணப் பிள்ளையையும் எழுப்பிக் கொடுத்தார். பிராமணனுந் துதிகூறிச் சென்றான்.

---

## ௧௯. யாகம் செய்தலும் சுவர்க்கம் புகுதலும்

யாகஞ் செய்தல்

இப்படியே இடையூறுகளையெல்லாம் நீக்கி இனிதாக அரசியல் செய்யும் நாட்களிலே அசுவமேதயாகஞ் செய்யத்தொடங்கினார். யாகத்துக்கு வேண்டும் பொருட்களெல்லாம் எண்ணிலவாய் வந்து நிறைந்தன. விபீடணன், சுக்கிரீவன் முதலியோர்களும் அளவில்லாத உபகாரங்களை அனுப்பினார்கள். முனிவர்களும் அரசர்களும் பிறரும் வந்துகூடினர். யாகக்கிரியைகள் கிரமமாய்

நடந்தன. சீதாதேவியின் வடிவம் பொன்னினாலே செய்யப்பட்டு யாகபத்தினியாக அங்கே வைக்கப்பட்டது. இராமபிரானுடைய புத்திரர்களாகிய குசன், இலவன் என்னும் இருவரும் வான்மீகிமுனிவருடைய கட்டளையினாலே அங்கே வந்து இராமாயணத்தைப்பாடி யாவர் மனதையுங் கவர்ந்தார்கள். அவருடைய சரீர காந்தியுங் கீதமும் யாவர்க்கும் இனிமையாய் இருந்தன. இராமபிரான் இருவரையும் நோக்கி "இந்தக் கீதத்தை உங்களுக்குப் படிப்பித்தவர் யாவர்?" என்று வினவினார். அவர் "வான்மீகிமுனிவரே எங்களைப் படிப்பித்தவரும் இந்தக் காவியஞ் செய்தவருமாவர்" என்று விடை கூறினர்.

இதைக்கேட்ட இராமபிரான் தம்பியர்களோடு வான்மீகிமுனிவரை யடைந்து "முனிசிரேட்டரே! உமது செயலுக்கு யான் செய்யுங் சீதையை ஏற்றல் கைம்மாறறியேன். எனது இராச்சியத்தை உமக்குத் தருகிறேன்" என்றார். அதனைக் கேட்ட முனிவர் சொல்லுவார். "இக்குமாரர் இருவரும் உமது குமாரர்கள். இவர்களைப் பெற்ற சீதை உமது மனைவி. இவர்களை ஏற்றுக்கொள்வதே எனக்குச் செய்யும் கைம்மாறாகும்" என்றார். இராமபிரான் முனிவரைநோக்கிச் "சீதாதேவி அக்கினியிலே புக்குக் கற்பினை மெய்ப்படுத்தினாலும் ஊர்ச்சனங்களோ நம்பவில்லை. சனங்களை நம்பும்படி செய்தபின் அங்கீகரிப்பேன்" என்றார். வான்மீகிமுனிவர் சீதையை அங்கேவரும்படி செய்தார். இராமபிரான் ஊர்ச் சனங்களை வருவித்தார். சீதாதேவியும் புத்திரர்களும் இராமபிரானுக்குக் கிட்ட வந்து நின்றார்கள். அப்போது

வான்மீகிமுனிவர் சீதாதேவியை நோக்கி, "மகளே! உனது கற்பிலே சனங்கள் கொண்டிருக்கும் ஐயத்தை உனது நாயகன் முன்னிலையிலே நீக்கிவிடு" என்றார். அப்போது சீதாதேவி "பூமிதேவியே! நான் கற்புடைய வளாயின் என்னை உன்னுள்ளே அடக்கிக்கொள்" என்றாள். பூமிதேவியும் வெளிப்பட்டுவந்து சீதாதேவியைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு பாதலம் புகுந்தனள். அதனைக்கண்ட இராமபிரான் "சீதாதேவியைப் பின்னுங் கொடு" என்று பூமிதேவியிலே கோபங் கொண்டு அம்பை எய்ய எடுத்தார். பிரமதேவர் இராமபிரானைத் தடுத்தார். இராமபிரானுங் கோபந்தணிந்து யாகத்துக்கு வந்தோர் யாவரையும் உபசரித்து அனுப்பி விட்டுச் சீதாதேவியின் மேல்வைத்த அன்பைப் புத்திரர் இருவரிலும் வைத்து நடத்தினர்.

மாமனாகிய யுதாசித்துச் சொல்லியபடியே பரதனுக்குச் சிந்துதேசத்தை இராமபிரான் கொடுத்தார். பரதனும் அங்கே கந்தருவர் பலரை வென்று சிலநாள் அரசியல் செய்தபின் அரசியலுக்குத் தக்க பக்குவமுடைய புத்திரர்களாகிய தக்கன், புட்கலன் என்னும் இருவருக்கும் இரு நகரங்கள் தாபித்து அரசியலிலே வைத்தான். தக்கனுடைய நகரத்தின் பெயர் தக்கசிலை. புட்கலனுடைய நகரத்தின் பெயர் புட்கலாவதி.

இலக்குமணனுந் தன்னுடைய காரபதம் என்னுந் தேசத்தைத் தனது புத்திரர்களாகிய அங்கதன், சந்திரகேது என்னும் இருவருக்கும் பிரித்துக் கொடுத்தான். இராமபிரான் முதலியோர் தத்தம் புத்திரர்களை அரசாட்சியில் வைத்தபின், இறந்துபோன தாய்மார்களுடைய அபரக்கிரியைகளையுங் கிரமமாகச் செய்துமுடித்தார்கள்.

சுவர்க்கஞ் சேருதல்

பின்னர் இயமனுனவன் ஏவலினுலே முனிவர்க்குரிய வேடத்தைத் தரித்துக்கொண்டு இராமபிரானுடைய இருக்கையிலே சென்று இராமபிரானைத் தனியே இருக்கச்செய்து தன்னுடைய வடிவத்தைக் காட்டி "நீர் சுவர்க்கத்திலே புகவேண்டும். இது பிரமதேவருடைய ஏவல்" என்றான். அச்சமையத்திலே இராமபிரானைக் காணும்படி துருவாச முனிவரும் வந்தார். உள்ளே ஒருவரும் போகாமல் வாயிலிலே காவலாக நின்ற இலக்குமணன் சாபத்துக்குப் பயந்து அவரைத் தடைசெய்யாமல் விட்டு, உள்ளே போய் இராமனுக்கு அறிவித்தான். துருவாசரும் உள்ளே போய் இராமபிரானைக் கண்டு பேசிக்கொண்டு மீண்டார். இயமனும் இராமபிரானிடம் அனுமதி பெற்று மீண்டான். பின்னர் இலக்குமணன் சரயுநதிக்கரையை அடைந்து யோகவழியாலே உடம்பை விட்டான். இராமபிரான் தனது புத்திரர்களாகிய குசன் இலவன் என்னும் இருவருக்கும் முறையே குசாவதி சராவதி என்னும் நகர்களைக் கொடுத்து அங்கே இருந்து அரசியல் செய்ய வைத்துவிட்டு வடதிசை நோக்கிச் செல்லும்போது அங்கே வந்த விமானத்திலேறிப் பரதன், சத்துருக்கன் முதலியோரும் பின்னே வரச் சென்று சரயுநதியை அடைந்தார். சரயுநதி யாவருஞ் சுவர்க்கலோகத்திலேறுதற்கு ஏணியாயிருந்தது. சுக்கிரீவன் முதலியோரைப் பழைய வடிவங்களிலே அடைய விட்டு மற்றையோரையும் மேலுலகங்களிலே விட்டார். அனுமானை வடக்கே இமயமலையிலே இருக்கச் செய்தார். விபீடணனைத் தெற்கே சித்திரகூடமலையிலே இருக்கச் செய்தார். இராமபிரான் இவையெல்லாஞ் செய்தபின் தாமுந் தம்முடைய மூர்த்தத்திலே புகுந்தார்.

## கஎ. குசன் அயோத்தியை அரசுபுரிதல்

அயோத்தி நகர அதிதேவதை

இராமபிரான் விட்டுணுவாகிய தமது வடிவத்தை அடைந்தபின் இலவன் முதலிய எழுவரும் ஒற்றுமையுடையராய்க் குணத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் ஒழுக்கத்தினாலும் சிறந்து விளங்கும் குசன் என்பவனையே தலைவனாகக்கொண்டு நடந்தார்கள். குசனும் அந்த எழுவரையுந் தழுவி நடந்தான். அந்த எழுவராலும் குசன் என்பவனாலும் இரகுவின் மரபு எட்டாகப் பிரிந்து விரிந்து விளங்கிற்று. ஒருநாள் இரவு அரசியல் விடயங்களை ஆலோசித்துக்கொண்டு கிடக்கையிலே ஒரு பெண் அவன் முன்னிலையிலே போய் "அரசனே! வெற்றி பெறுக" என்று வாழ்த்தி நின்றாள். அவளைக் கண்டவுடனே குசன் ஆச்சரியங்கொண்டு கட்டிலினின்றுங் கதுமென எழுந்து "பெண்ணே! பூட்டப்பட்டிருக்கும் என் படுக்கையறையுள்ளே எப்படிப் புகுந்தாய்? பிறன் மனைவியும் பெருங் கவலையுடையவளுமாகத் தோன்றுகிறாய். நீ யாவள்? உனது நாயகன் யாவன்? என்னிடம் நீ வந்த காரணம் யாது? இரகுவின் மரபில் வந்தோர் பிறன்மனைவியை விரும்பார் என்பதை அறிந்துகொள்ளுதி" என்று சொன்னான்.

அதனைக் கேட்ட அந்தப் பெண் குசனை நோக்கி "அரசனே! உனது தந்தையாகிய இராமபிரான் பழைய வடிவங்கொண்டு வைகுண்டஞ் சென்றபின் அரசனின்றித் தலைதடுமாறும் அயோத்திமாநகரின் அதிதெய்வம் என்று என்னை அறிந்துகொள். இரகுவின் மரபிலே தோன்றி அரசியலும் பெற்றுச் சகல சாமர்த்தியமுற்று நீ விளங்கும்போது நான் வெறுமையுற்றேன்.

அயோத்திமா நகரமும் பாழ்பட்டுக் கிடக்கின்றது. எத்தனையோ மேல்வீடுகள் அழிந்தொழிந்தன. எத்தனையோ சாலைகள் பழுதடைந்தன. எத்தனையோ மதில்கள் இடிந்தன. பெண்களினுடைய முகராகங்களினாலே விளங்கும் பலகணிகளெல்லாம் சிலந்தி வலந்த நூல் வலையினாலே விளங்குகின்றன. நிலாக்கிரணம் வந்து விளங்கும் நிலாமுற்றமெல்லாம் புல்லும் பூண்டும் விளங்குகின்றன. தூண்களிலே வைக்கப்பட்டிருக்கும் பதுமைகளுக்குப் பாம்புரிகளே உத்தரியமாய் விளங்குகின்றன. மாடங்களிலே நித்திரை செய்த மயில்களெல்லாம் மரங்களிலே நித்திரை செய்கின்றன. மகளிர் புகுந்து நீர்விளையாடும் வீட்டு வாவிகளெல்லாம் காட்டெருமைகள் புகுந்து கலக்குகின்றன. இராத்திரியிலே பெண்களும் அஞ்சாது செல்லும் அரச வீதியெல்லாம் நரிகளும் பேய்களும் திரிகின்றன. சனங்கள் போய்த் தீர்த்தமாடிப் பூசைசெய்யும் சரயுநதிக் கரைகளெங்கும் மான்கள் கக்கிவிட்ட இரைகளும், நரிகளும், குரங்குகளும் விளங்குகின்றன. ஆதலால் அரசனே! நீ இந்தக் குசாவதி நகரத்தைவிட்டு அயோத்திமாநகரத்தில் வந்திருந்து அரசுசெய்ய வேண்டும்" என்றது. குசனும் மனப் பிரியத்தோடும் அதற்குடன்பட்டான். உடனே அதிதெய்வமும் மறைந்தது.

இந்தக் காரியத்தைக் குசன் கேட்டுப் புரோகிதர், அமைச்சர் முதலியோரோடும், சேனைகளோடும் ஒரு சுப

**குசன் அயோத்தி போதல்**

முகூர்த்தத்திலே புறப்பட்டு விந்திய மலையையுங் கங்கையாற்றையுங் கடந்து அயோத்தியிற்போய் அதனைத் திருத்திப் புதிப்பித்து அமைச்சர் முதலி

யோரை அங்காங்கிருந்தித் தானும் வீற்றிருந்து சனங்களெல்லாம் மனம் மகிழும்படி அரசியல் செய்தான். இப்படி அரசுசெய்யுங் காலத்திலே ஒரு வசந்த காலம் வந்தது. அந்த வசந்த காலத்திலே வெம்மை தாங்க மாட்டாது வருந்திப் பெண்களோடுஞ் சென்று சரயு நதியிற் புகுந்து நீர்விளையாடினான். அங்குள்ள முதலைகளெல்லாம் அவனுடைய கட்டளைப்படி பாதவரால் வலை வீசி அகற்றப்பட்டன. அவனும் பெண்களும் நெடுநேரமாக நீருள்ளே நின்று பலவித விளையாடலையுஞ் செய்து கரையிலுள்ள படங்கு வீட்டிற் புகுந்தார்கள். அப்போது குசன் தனது புயத்திலே அணிந்த வாகுவலயத்தைக் காணமற் பெரிதும் மனம் வருந்தினான். அந்த வாகுவலயமோ இலக்குமியை வசீகரிக்குங் குணமுடையது. குசனுக்குக் கொடுக்குமுன் இராமபிரானல் அணியப்பட்டது. இராமபிரானுக்கு அகத்திய முனிவர் கொடுத்தது. அது நீர்விளையாடும்போது சரயு நதியிலே வீழ்ந்துபோயிற்று. அதனுடைய கேடுதியைத் தாங்குவதெப்படி? பின் நீரிலே நீந்தி விளையாடவும் நீருள்ளே புகுந்து கீழேபோன பொருட்களைத் தேடி எடுக்கவும் வல்ல கரையார்களை வருவித்துச் சரயு நதியிலே புகுந்து அந்த வாகுவலயத்தைத் தேடும்படி கட்டளையிட்டான்.

அவர்கள் நீருள்ளே புகுந்து தேடிப்பார்த்துங் கிடைக்கப் பெறுமற் கரையிலே ஏறி அரசனைக் கண்டு, "தேவரீர்! நாங்கள் பிரயாசப்பட்டுத் தேடியும் வாகுவலயம் கிடைத்திலது. ஆயினும் அந்த நீருள்ளே வசிக்கும் குமுதன் என்னும் பாம்பினலே கவரப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சில காரணங்கள் உண்டு"

என்றார்கள். குமுதன் மேலே குசன் கோபங்கொண்டு பாணப்பிரயோகஞ் செய்தான். பாணஞ் சென்று தாக்கிய தாக்கத்திலே குமுதனும் அச்சமுற்று வாகுவலயத்தோடும் கன்னிகை ஒருத்தியோடுஞ் சரயுநதியினின்றுங் கரையிலே வந்தான். குமுதனைக் கண்டவுடனே குசன் கருடபாணத்தை எடுத்தான். குமுதன் மேலும் பயந்து நடுநடுங்கி, "உமது வாகுவலயத்தை இந்தக் கன்னிகையே நீருள்ளே கிடந்தெடுத்தாள். இந்த வாகுவலயத்தை ஏற்று முன்போலப் புயத்திலே தரித்துக் கொள்ளும்; இந்தக்கன்னிகையையும் ஏற்றுக்கொள்ளும்" என்று அக்கினி சாட்சியாக விவாகஞ் செய்து கொடுத்துக் குசனோடுஞ் சுற்றத்தவரோடும் உறவு பூண்டு கருடப்பறவையால் வரும் அச்சமும் நீங்கித் தான் வசிக்கும் தானத்திற்குச் சென்றான். குசன் குமுத்துவதியுடன் கூடி இனிது வாழ்ந்தான்.

---

## கஅ. அதிதி அரசியலும் வமிசமுறையும்

குசனும் குமுத்துவதியுங்கூடி இல்லறம் நடாத்தி வருங் காலத்திலே குமுத்துவதியிடத்திலே ஒரு புத்திரன் பிறந்தான். அவன் பெயர் அதிதி.

அதிதி வருணவன அதிதியுந் தந்தையினாலே சகல கல்வியுங் கற்பிக்கப்பெற்றுக் கல்வி, கேள்வி, வீரம் முதலியவைகளிலே விளங்கி தாய்மரபு தந்தை மரபு என்னும் இரு மரபுகளையும் பெரிதும் விளக்கித் தந்தையாலே விவாகமும் செய்விக்கப்பெற்றான். அதன் பின் தந்தையாகிய குசன் இந்திரனுடைய நட்பினாலே அசுரன் ஒருவனைப் போரிலே கொன்று தானும் அவனாலே கொல்லப்பட்டான். அவன் இறந்தான் என்ப

தைக் கேட்ட மனைவியாகிய குமுத்துவதியுந் தனதுயிர் துறந்தாள். வயோதிகர்களான மந்திரிமார்கள் எல்லாரும் வந்துகூடி ஆலோசனை செய்து மைந்தனாகிய அதிதிக்கு முடிசூட்டி அரசியல் செய்யும்படி வைத்தார்கள். அரசனானபின் அதிதியும் குருமாருக்கும் பிறருக்கும் திரவியங்களை வாரி வாரி வீசினான்; சிறையிலிருந்தோரை விடுவித்தான்; பொதியெருதுகளைப் பொதிசுமவாவல் விலக்கினான்; பசுக்களின் பால் கறவாமற் கன்றுண்ணும்படி விட்டான்.

அதன்பின் யானைத் தந்தத்தினாற் செய்யப்பட்ட ஓர் ஆசனத்திலேயிருந்து, வாசனைத் திரவியங்களும் ஆபரணங்களும் அணியப்பெற்றுச் சிங்காசனத்திலே வீற்றிருந்து தேவராசன்போல விளங்கினான். குருவாகிய வசிட்டமுனிவருடைய மந்திரவலியினாலும் வில் வித்தையின் வல்லமையாலும், நீதியும் வீரமும் சேரக் கூடியே செயற்கருங் காரியங்களையுஞ் செய்வான். எப் போதுஞ் சனங்கள் வந்துசொல்லும் முறையீடுகளைத் தானே விசாரித்து நீதிவழுவாமல் முடிவுசெய்வான். அறியப்படாத காரியங்களை ஒற்றர் வழியால் அறிவான். எந்தக் காரியங்களையும் மந்திரிமாருடன் ஆலோசித்தே செய்வான். அறத்தின் பொருட்டுப் பொருளின்பங்களையும், அவற்றின்பொருட்டு அறத்தையும் தேடுவான். திரவியசாலையை அறம் பொருள் என்பவற்றின் பொருட்டும் தன்கீழுள்ள அநுசீவிகளின் பொருட்டும், ஆபத்தின் பொருட்டும் பேணுவான். அநித்தியப பகைகளாகிய புறப்பகைகளை வெல்லுமுன் காமம் முதலிய உட்பகைகளை வெல்லுவான். இப்படியே நீதி வித்தையின் வலிமையினாலும், சற்குணங்களாலும், முயற்சியினாலும்

இராசாதிராசனாக விளங்கினான். அசுவமேத யாகத்தை யுஞ் செய்துமுடித்தான். இவனுடைய இராச்சியத்திலே மழைக்குறைவும், அகாலமரணமும், வறுமையுமில்லை.

இந்த அதிதி என்னும் அரசன் நிடதராசன் புதல்வியை மணம் புணர்ந்து புத்திரன் ஒருவனைப் பெற்றான். அவன் நிடதமலைபோன்ற பெலமுடையவன். அவன் பெயர் நிடதன். நிடதனுடைய செய்கையைக் கண்ட அதிதியானவன் பெரிதும் மகிழ்ச்சியுற்று அரசியலை நிடதனுக்குக் கொடுத்துவிட்டுச் சுவர்க்கலோகம் போயினன். நிடதன் என்பவன் நெடுங்காலமாக அரசியலைச் செய்து சனங்களை மகிழ்வித்துத் தன்னுடைய அந்திய காலத்திலே மைந்தனாகிய நளனுக்குக் கொடுத்தான். நளனோ தந்தையினும் விசேடமாகச் சனங்களை மகிழ்விப்பவனும் பகைவரை வெல்லுபவனுங் கந்தருவர் பாடுங் கீர்த்திமானுமாய் விளங்கி ஒரு புத்திரனைப் பெற்றான். அவன் பெயர் நபசன். வயோதிக காலத்திலே நளனும் நபசனுக்கு அரசியலைக் கொடுத்துவிட்டு வனத்துக்குப் போனான். நபசனும் தனது புத்திரனாகிய புண்டரீகன் என்பவனுக்குப் பூமியைக் கொடுத்து விட்டுத் தேவுலகம் போயினான். புண்டரீகனும் சேமதன்னுவாகிய மகனிடத்திலே அரசியலை வைத்துவிட்டு வனத்துக்குப் போயினன்.

**வமிசாநுக்கிரகம்**

சேமதன்னுவான் சனங்களைப் பாதுகாத்தலிற் கண்ணுங் கருத்துமாயிருந்தான். அவனுக்கு யுத்தத்தில் முன்னே செல்லும் பெருவலியுடைய தேவாநீகன் என்னும் புத்திரன் பிறந்தான். நற்குணங்கள் எல்லாம் ஒருங்கு திரண்டு உருவெடுத்தாலொத்த அந்தச் சேம

தன்னுவான் நான்கு வருணங்களேயும் காக்கும் பாரத்தைத் தனது புத்திரனுகிய தேவாநீகனிடம் பொறுப்பித்துத் தேவ உலகம் போனுன். புலன்களே வென்ற தன்மையினுற் தேவாநீகன் பகைவர்களாலும் விரும்பப்பட்டவனுய் விளங்கினுன். அவனுடைய மதுரமான வசனங்கள் பயப்பட்டோடும் மான்களேயும் கவரும் சக்தியுள்ளன. தேவாநீகன் அகீநகு என்னும் ஒரு புத்திரனேப் பெற்ருன். அவன் இழிந்தோர் உறவு இல்லாதவனுயும் எல்லா வலிமையும் உள்ளவனுயும் இருந்தான். புருடருடைய விசேடங்களே அறிந்தவனும், நிபுணனுமாகிய அந்த அகீநகு என்பவன் கடவுளேப்போல் தவறிப்போகாத உபாயவழிகளே யுடையவனுய் நான்கு திக்குகளேயும் அரசாண்டான். அகீநகு பரலோக யாத்திரை சென்றபோது அவன் மகன் பாரியாத்திரன் இராசலக்குமியின் நன்மையைப் பெற்று அரசியல் நடாத்தினுன். பாரியாத்திரனுக்குக் கற்பலகைபோலும் விசாலமுள்ள மார்பையுடைய சிலன் என்னும் புத்திரன் இருந்தான். அவன் சத்துருக்கள் யாவரையும் வெற்றி கொண்ட வீரனுயும் பிறரால் புகழப்பட்டபொழுது நாணம் அடைபவனுயும் இருந்தான். சிலன் போகங்கள் அனுபவிக்கும் நோக்கமாகத் தனது புத்திரன் உன்னுபனிடம் அரசியற் பொறுப்பைக் கொடுத்தான். இவ்வரசன் எல்லா அரசர்களுக்கும் தலைவனுக விளங்கினுன்.

இவன் பின் வச்சிரநாபன் என்னும் புத்திரன் இந்திரனே ஒத்த வலிமையும், இடியையொத்த முழக்கத்தையும் பொருந்தியவனுக விளங்கி அரசு புரிந்தான். சங்கணன் என்னும் புத்திரன் வச்சிரநாபனுக்குப்பின் அரசாண்டான். சங்கணனுக்கு வியூஷிதாசுவன் என்

னும் ஓர் புத்திரன் பிறந்தான். இவன் பச்சைக்குதிரை பூண்ட தேரையுடைய சூரியனை ஒத்த மகிமையுடைய வனும் அச்சுவினி குமாரரைப்போல அதிக சிறப்புள்ள வனுமாய் இராச்சியத்தை யாண்டான். அவன் காசி விசுவேசுரனை உபாசித்துத் தானே தன்மகனாகிய விசு வசகன் என்னும் பெயருடன் பிறந்தான். அவன் பூமியிலுள்ள சகலருக்கும் சிநேகிதனும் பூமியை இரட் சிப்பவனும் இருந்தான். விட்டுணுவின் அம்சமாகிய இரணியநாபன் பிறந்தபொழுது வாயுவோடு கூடிய அக்கினி மரங்களை அழிப்பதுபோல் இவன் பகைவர் களை அழித்தான். விசுவசகனும் கிழப்பருவம் அடைந் ததினால் நித்தியானந்தத்தைப் பெற விருப்பமுள்ள வனாய் முழந்தாள் வரையும் நீண்ட புயமுள்ள இரணிய நாபனை இராசாவாக்கித் தான் மரவுரி பூண்டு துறவியா னான். சூரியவமிசத்திற்கு ஒளிபோன்றவனும் உத்தர கோசல நாட்டுக்கு அரசனும், சோமயாகஞ் செய்த வனும் ஆகிய இரணியநாபனுக்கு இரண்டாஞ் சந்திரன் எனத் தகுந்த கௌசல்லியன் என்னும் புத்திரன் ஒருவன் பிறந்தான். கௌசல்லியன் தனக்குப்பின் புத்திரனாகிய பிரமிட்டனை இராச்சியத்தில் வைத்தான். பிரமத்தோடு இரண்டறக் கலக்கும் பக்குவமுள்ள அந்த அரசனுக் குக்கீழ் எல்லாச்சனங்களும் அமைதியோடும் வாழ்ந் தார்கள். பிரமிட்டனுக்குப் புத்திரன் என்னும் ஒரு பெரும் மகவு பிறந்தது. அவன் பிதாவுக்குத் தொண்டு செய்ததினால் பெரும் புகழை ஈட்டினான். பிரமிட்டனே தனது மகனின் உதவியைக் கொண்டு தனது குலப் பெருமையை நாட்டிப் பின் மேற்கதியை யடைந்தான். புத்திரன் மனைவி இரண்டாம் பூசநட்சத்திரம் எனத் தகும் புஷ்யன் என்னும் புதல்வனைப் பெற்றாள். புத்

திரன் தன்மகனிடம் இராச்சிய பாரத்தைக் கொடுத்து, சைமுனி முனிவரையடைந்து யோகவித்தையைக் கற்றுச் சுவர்க்கம் புக்கான். பின்னர் புஷ்யன் புத்திரனாகிய துருவாசந்தி என்பவன் அரசனானான். துருவாசந்தியும் வேட்டையாடும் பொழுது சிங்கத்தினாற் றாக்கப்பட்டு இறப்பை எய்தினான். இவன் இறக்கும் பொழுது சுதர்சனன் என்னும் புத்திரன் குழந்தையாய் இருந்தான்.

இவ்விஷயங்களை அறிந்த மந்திரிமார்கள் அந்தக் குழந்தைக்கு விதிமுறைப்படி அரசுரிமைப் பட்டஞ் சூட்டினார்கள். இரகுவமிசத்தில் இவ்விளம் பருவமுள்ள குழந்தையரசன், ஆகாயத்திற் பாலசந்திரன் போலவும், காட்டில் தனிச்சிங்கக் குட்டிபோலவும், நீரில் தாமரை அரும்புபோலவும் நின்று விளங்கினான். இந்த அரசிளங் குமரன் வயசிற் சிறியவனாயினும் அறிவிற் பெரியவனாய் இருந்தான். முடியுடை மன்னர் எவருள்ளும், பொற்பீடத்துக்குச் சற்றுமேலுள்ள பாதங்களை வணங்காதார் இல்லை. நீலரத்தினம் சிறிதாய் இருந்தாலும் அதனை மகா நீலம் என்று கூறுதல்போல இவன் சிசுவாய் இருந்தாலும் விசேடம்பற்றி மகாராசன் என்று புகழப்பட்டான். சாமரைகள் வீசப்படுபவனும் இரு கன்னங்களிலும் மயிர்க் கூந்தல்களையுடையவனுமாகிய அந்த அரசனது கட்டளையைச் சமுத்திரந்தானும் மறக்கவில்லை. வாகைப் புஷ்பம்போலும் மெதுவான சரீரத்தையுடைய அவன் ஆபரணங்களை அணிவதினாலும் களைப்படைந்தான். மெலிந்த சரீரத்தை உடையவனாய் இருந்தும் இராச்சியபாரத்தை இலகுவிற் றாங்கினான். அவன் அக்ஷரங்களைப்பற்றி முற்றிய அறிவை

எப்பொழுது பெற்றானோ அப்பொழுதே பெரியோர் சகவாசத்தினால் இராச்சிய பரிபாலன ஞானத்தையும் முற்றாகப் பெற்றான். வயசு செல்லச் செல்லப் பரம்பரையாயுள்ள விசேடகுணங்கள் அவனிடத்திற் காணப்பட்டன. ஆசிரியருக்குப் பிரயாசமின்றித் தர்மார்த்த காமமாகிய புருஷார்த்தங்களைப்பற்றி நன்கு கற்றான். அவன் வாலிபப் பருவம் அடைந்ததும் பெண்கள்பலர் அவனை மோகித்தனர்.

கல்வி கேள்விகளில் மேம்பட்டவனும் இந்திரியங்களை வென்றவனுமாகிய சுதரிசனன் தனது புத்திரனாகிய அக்
இனிவருணனைச் சிங்காசனத்திலிருத்தி
அக்கினி வருணன் நைமிசாரணியம் சென்று அரண்மனை
யிற் கிடைத்த சௌகரியங்களை மறந்த
வனாய்த் தவஞ்செய்துகொண்டிருந்தான். அக்கினிவருணன் அரசியல் நடாத்தும்விடயத்திற் சிரமப்படவில்லை. அவன் அரசியற்பொறுப்புக்களைமந்திரிமாரிடம்கொடுத்துவிட்டுப் பெண்களுடன்கொண்டாடுவதில்முழுக்காலத்தையும்செலவிட்டான். சனங்கள் அவனைப் பலமுறைகாண விரும்பியும் அவனை நேரில் ஒருமுறையும் சந்திக்கவில்லை. சிலவேளைகளில் மந்திரிமார் வேண்டுகோளுக்கு இணங்கித் தனது பாதங்களை பலகணிவாயிலின் வெளியே வைத்திருப்பான். அப்பொழுது அவனைப்பார்க்க விரும்பிய சனங்கள் தாமரைப் பூப்போன்ற அவனுடைய பாதங்களுக்கு வேண்டியவாறு பூசைகள் செய்து செல்வார்கள். இவன் எப்பொழுதும் வீணைவாத்தியம் கையில் ஏந்தியவனாய்ப் பல மகளிரோடு கூடவிருந்து காலங் கழிப்பது வழக்கம். புலனுகர்ச்சியில் மனம் நோக்கிய இவன் இராச்சிய பரிபாலனஞ் செய்ய இயலாதவனாய் இருந்தான். தீய வொழுக்கம் உள்ளவனாய் இருந்தபோதிலும் மற்றையு

அரசர்கள் இவனைக் கண்டிக்க இயலாதவராயினர். சிறிது சிறிதாகச் சிற்றின்ப வாழ்வில் அமிழ்ந்தினதின் பயனாக இவன் வியாதியாளனாகக் காணப்பட்டான். இவன் வைத்தியர்கள் பலமுறை கூறிய புத்திமதிகள் ஒன்றையும் கேட்கவில்லை. க்ஷயநோய் காரணமாக இவன் முகம் வெளிறிற்று. வேலைக்காரர் உதவியின்றி நடக்க முடியாமல் இருந்தான். "அரசனுக்கு யாது தீங்கு சம்பவித்ததோ?" என ஐயுறும் சனங்களுக்கு, மந்திரிமார் "அரசன் பிள்ளைப் பாக்கியம் பெறும் பொருட்டு இப்போது தவஞ் செய்கிறான்" என்று சொல்லி வியாதி விஷயத்தை மறைத்தார்கள். மந்திரிமார்கள் வியாதியை நீக்கும்பொருட்டு அந்தியேட்டி முறைகளை அறிந்த புரோகிதரோடு யாகாக்கினி வளர்ப்பதாகப் பாசாங்குபண்ணி மூட்டப்பட்ட சுவாலையையுடைய அக்கினியிலே அரசனை இரகசியமாக வைத்தார்கள். ஊரிலுள்ள பிரமுகர்கள் யாவரும், மந்திரிமார்களும் அரசன் மனைவி சோபனமான கருப்பம் தரித்திருக்கிறாள் என்பதை அறியலானார்கள். இராசலக்குமியும் அவளை அடைந்தது. அரசனுடைய மரணத்தினால் உண்டுபண்ணப்பட்ட சோகத்தின் காரியமாகிய உட்டணக் கண்ணீர்களினாற் சுடப்பட்ட கருப்பமானது பொற்குடவாயிலாக விடப்பட்டதும் இரகுவமிச விதிமுறை அபிஷேகம் பண்ணப்பட்டதுமாகிய நீரினால் குளிர்ச்சியடைந்தது. பிரசவ சமையம் எதுவோ என எதிர்பார்க்கும் சனங்களின் விருத்தியின் பொருட்டுப் பொற் சிங்காசனத்தில் வீற்றிருப்பவளாகிய இராணி பரம்பரையாய் வந்த மந்திரிமார்களுடைய பேருதவியைக் கொண்டு தனது கணவனது இராச்சியத்தை ஒருவித குறையுமின்றி நடாத்தினாள்.

# அருஞ்சொற்பொருள்

அக்ஷரம்-எழுத்து.
அகற்றல்-நீக்கல்.
அகாலம்-அல்லாதகாலம்.
அங்கதேசம்-வங்காளதேசத்தில் ஒரு பகுதி.
அங்கீகரித்தல்-உடன்படல்.
அசரீரி-ஆகாயவாணி. அ-இன்மை. சரீரி-சரீரமுடையது.
அசுவம்-குதிரை.
அஞ்சுதல்-பயப்படல்.
அடக்கல்-ஒடுக்கல்.
அணிகலம்-ஆபரணம்.
அணிமை-சமீபம்.
அணை-நீர்தடுக்கும் வரம்பு.
அத்தியயனம்-படித்தல்.
அதிதெய்வம்-ஆளுந்தெய்வம்; அதிட்டிக்கும் தெய்வம்.
அந்தப்புரம் - அரசன் மனைவி இல்லம்.
அந்தியகாலம் - முடிவுகாலம்; மரணகாலம்.
அநுசீவிகள்-பிறர் ஆணைகொண்டுசீவிப்போர்; வேலைக்காரர்.
அநித்தியம்-அழிவுள்ளது; நித்தியமல்லாதது.
அனுபவித்தல் - தானே கண்டறிதல்; துய்த்தல்.
அநுமதி-உத்தரவு; சம்மதி.
அபரபக்கம் - பௌர்ணமிக்குப் பின் வரும் பதினைந்து திதி கொண்ட பக்கம்.
அபயம் - அடைக்கலம்.
அபானவாயு-பத்து வாயுக்களில் ஒன்று; மலசலங் கழிய வகை செய்யும்.
அம்சம் - பங்கு.
அமர்தல் - இருத்தல்.
அமைச்சர் - மந்திரிமார்.
அமைதல் - பொருந்தல்.
அர்த்தம் - பொருள்.
அரக்கி - இராக்கத மகள்.
அரம்பை - தேவப்பெண்.
அரிசந்தனம் - ஐந்தருக்களிலொன்று; மஞ்சள்.
அருக்கியம் - நீர்கொண்டுசெய்யும் ஓர் வழிபாடு.
அருந்துதல் - உண்ணல்.
அரும்பு - மலருமுன் பூவின் உறுப்புக்களை யடக்கி யிருக்கும் ஒரு படைப்பு வடிவம்.
அலங்காரம் - அழகு.
அவதாரம் - பிறப்பு.
அவந்தி-சப்தபுரிகளுள் ஒன்று. இது தற்காலத்தில்உச்சயினி (Ujjayini) எனப் பெயர் பெறும்.
அவமதித்தல் - இகழ்தல்.
அவி - தேவர்கட்கு வேள்வியில் கொடுக்கும் உணவு.
அழல் - அக்கினி.
அற்றம் - சோர்வு; துக்கம்.
ஆச்சிரமம் - முனிவர்வாசம்.
ஆசீர்வாதம் - வாழ்த்துக்கூறல்.
ஆதித்தன் - சூரியன்.
ஆயம் - மகளிர் கூட்டம்.
ஆரியாய்! - அழகுடையவளே!
இங்கிதம் - இனிமை; கருத்தினைக் குறிப்பிக்கும் உறுப்பின் தொழில்.
இடர் - துன்பம்.
இடித்தல் - கெடுத்தல்.
இடையூறு - விக்கினம்; தடை.

இராச்சியம் - இராசாவின் ஆளுகைக்குரிய இடம்.
இராமன் - அழகுடையவன்.
இருக்கை - ஆசனம்.
இருதுகாலம் - கர்ப்பந்தரிக்கக் கூடிய காலம்.
இருபிறப்பாளர்-அந்தணர்; உபநயனத்துக்கு முன்னொரு பிறப்பும் பின்னொரு பிறப்புமாகிய இரு பிறப்பினையுடையராதலின்.
இல்லறக்கிழத்தி - மனைவி.
இழுக்கு - குற்றம்; வழு.
இறும்பூது-அதிசயம்;பெருமை
ஈட்டல் - சம்பாதித்தல்; திரட்டல்.
ஈதிவாதை - வேதனை செய்யும் நோய்; அதிகமழை, மழையின்மை, விட்டில், கிளி, எலி, அணுகியிருக்கும் அரசன் எனப்படும் ஆறினாலும் வருங் கேடு.
உத்தரம் - வடக்கு.
உத்தரீயம் - உடம்பின்மேல் அணியும் சீலை.
உதித்தல் - தோன்றல்.
உபசாரம் - தொண்டுசெய்தல்; முகமன் வார்த்தை கூறல்.
உபவாசம் - உணவின்றி இருத்தல்.
உபாசித்தல் - வழிபடல்.
உபாயவழிகள் - அவை இன்சொல், வேறுபடுதல், கொடுத்தல், தண்டித்தல் என்னும் நான்குமாம்.
உரையாடல் - சொல்லல்.
உற்பத்தி - தொடக்கம்.
உற்பவம் - பிறப்பு.
உறவு - சம்பந்தம்.
உறுப்பு - அவயவம்; உடல்.
உன்னதம் - உயர்ச்சி.
ஊறு - இடையூறு.
எண்ணிலவாய் - அளவில்லாததாய்.
எளிதில் - இலகுவில்.
எளிமை - வலியின்மை.
ஏகச்சக்கரவர்த்தி - தனியாணை செலுத்துவோன்; மற்றொருவரைப் பணியாது தனியாள்வோன்.
ஐந்தரு - ஐந்துமரங்கள்; அவையாவன :- சந்தனம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பன.
ஐயம் - சந்தேகம்.
ஒற்றர் - அரசர்க்குரிய ஐம்பெருங் குழுக்களில் ஒருவர். அவர்மறைந்துசென்று இரகசியங்களை ஆராய்வர். ஒற்று-ஆராய்தல், அர் - விகுதி.
ஒழுகுதல் - நடத்தல்.
ககுத்தன் - சூரிய மரபிலுள்ள ஓர் அரசன்.
கடிதல்-தண்டித்தல்; கோபித்தல்.
கடிமணம் - விவாகம்.
கணை - பாணம்.
கடுவாய் - ஒருவகைப் புலி.
கதி - வழி.
கதுமென - விரைவாக.
கபடம் - வஞ்சனை.
கந்தமூலம் - கிழங்கு.

கயம் - இருமல்; காசநோய்.
கருதுதல் - நினைத்தல்.
கலக்கம் - துன்பம்.
கலிங்கம்-சென்னைக்குச் சிறிது தூரம் வடக்கே குட்டாய்க் (Cuttack) வரையுமுள்ள தேசத்தைக் குறிக்கும்
கவர்தல் - களவாடல்; பிடித்தல்; வசீகரித்தல்.
களிற்றுயானை - ஆண்யானை.
களைதல் - நீக்குதல்.
காதம் - ஏழரை நாழிகை வழித்தூரம்; பத்து மைல்.
காதல் - விருப்பம்.
காந்தி - ஒளி.
காமரூபம் - வங்காளத்து வடகிழக்கேயுள்ள அசாம் (Assam)நாட்டிலொருபகுதி
கார்த்தவீரியன் - யது குலத்திலே வந்த கிருதவீரியன் என்பவனுடைய மகன். தத்தாத்திரேய முனிவருடைய அருளினாலே ஆயிரங் கையடைதல் முதலிய வரங்களைப்பெற்றவன். இராவணனைக் கயிற்றினாற் பிணித்துத் தன்னகர்கருக் கொண்டு வந்தவன்.
கிரணம் - ஒளி.
கிரமம் - ஒழுங்கு.
கிருபை-அருள், தயை;உயிரின் துயரை மாற்ற விரும்புதல்.
கிளர்தல் - நிறைதல்; வளர்தல்.
கீதம் - இசைப்பாட்டு.
குசலம் - நன்மை.
குணம் - தன்மை; பண்பு.
குலைத்தல் - அழித்தல்.
குவை - கூட்டம்.
கேண்மதி - கேட்குதி.
கைம்மாறு - எதிருபகாரம்.
கோபதாபம் - கொடுங்கோபம்.
கோரம் - கொடுமை.
சகவாசம் - கூடவசித்தல்.
சங்கமம் - இரு ஆறுகள் கூடும் இடம்; ஆறுங்கடலும் கலக்குமிடம்.
சஞ்சரித்தல் - வாசஞ்செய்தல்.
சதக்கிரது - நூறுயாகம் செய்தவன்; இந்திரன்.
சதாசாரம் - நல்லொழுக்கம். சத்-ஆசாரம் சத்-நன்மை ஆசாரம் - ஒழுக்கம்.
சம்மோகனம் - மயக்கத்தைக் கொடுப்பது
சமாதி - மௌனம்; யோகத்திருத்தல்.
சயம் - வெற்றி.
சயமரம் - தானே கணவனை வரித்தல்.
சலக்கிரீடை - நீர் விளையாட்டு.
சாகம் - எழுதீவுகளிலொன்று. அவை நாவல், இறலி,குசை, கிரவுஞ்சம், புட்கரம்,தெங்கு, கமுகு என்பன (இவ்வெழுவகைப் பொருளும் அவ்வத்தீவின் மிக்கன வாகையாலிவற்றாற் பெயர்பெற்றன.)
சான்று - சாட்சி.
சிரமம் - இளைப்பு; வருத்தம்.
சிலம்பு - காலணி.
சிறுநீர் - மூத்திரம்.
சீறல் - கோபித்தல்.
சுவாத்தியம் - ஆரோக்கியம்.

சேட்டை - செயல்; குணங் கெட்ட தொழில்.
சேவை - வழிபாடு; தொண்டு.
சோகம் - துக்கம்.
சோனை - கங்கையாற்றுடன் கலக்குமோர் சிற்றாறு (River Sone).
சோபனம்-நன்மை;சந்தோசம்.
சோமயாகம் - ஒருவகை யாகம்.
சோரம் - களவு. [மின்மை.
சௌகரியம் - சுகம்; ஆயாச
தக்கிணை-யாகமுடிவில் புரோகிதருக்குக்கொடுக்கும் திரவியம்.
தகனஞ்செய்தல் - எரித்தல்.
தசரதன் - பத்துத் திக்கிலும் செல்லும்தேரையுடையவன் தசம் - பத்து. இரதம்-தேர்.
தணிதல் - குறைதல்.
தண்டகாரணியம் - தண்டகன் என்பவனுடைய நாடாயிருந்து சுக்கிர சாபத்தாற் காடான இடம்.
தபோவனம் - முனிவர் தவஞ் செய்யுங் காடு.
தம்பதி-கணவனும்மனைவியும்.
தம்பித்தல்-நிறுத்தல்;தடுத்தல்.
தர்சனம் - காட்சி.
தழைத்தல் - வளர்தல்; வாழ்ந்திருத்தல்.
தவிர்த்தல் - நீக்கல்.
தீர்க்க சத்திரம் - நீடிய காலத்துக்கு இடைவிடாது செய்யும் ஓர்வகை யாகம்.
துகள் - புழுதி; தூசி.
துதியைப்பிறை - இரண்டாம் பிறை.
துறத்தல் - விடுதல். [சுத்தம்.
தூய்மை - குற்றமின்மை; பரி
தெளிதல் - அறிவுபெறுதல்.
தேயு - அக்கினி.
தேவராசன் - இந்திரன்.
தைத்தியர் - அசுரர்.
தொந்தம் - தொடர்பு; கெடுங் கோபம்.
தோகை - மயில்.
நரேந்திரன் - அரசன்
நாணம் - வெட்கம்.
நாமதேயம் - பெயர்.
நாரதர் - தேவ முனிவருள்ளோ ஒருவர்; இவர் பிரமாவின் மனத்திற் றோன்றினவர்.
நிந்தைமொழி - வசைமொழி.
நிமித்தம் - காரணம்.
நியமம் - நிச்சயம்.
நீர்த்தாரை - நீர் ஒழுக்கு.
நிலாமுற்றம் - வீட்டின் மேல் வெளியாயிருக்கும் முற்றம்.
நிபுணன் - சாமர்த்தியவான்.
நுகர்தல் - அநுபவித்தல்.
நெறி - முறை.
பங்கம் - தோல்வி; இடையூறு.
படங்குவீடு - சீலை வீடு.
பதவி - நிலை; கதி.
பதுமை - பொம்மை.
பயத்தல் - விளைத்தல்.
பாதவர் - கரையார்.
பரமாத்மா - கடவுள்.
பரலோகயாத்திரை - மேலுலகம் போதல்; இறத்தல்.
பரவசம் - அறிவு சோர்வு.
பராக்கிரயம்-சரீர சாமர்த்தியம்.
பரிதாபம் - கவலை; துக்கம்.

பரிபாலனம் - பாதுகாத்தல்.
பரியந்தம் - எல்லை.
பரிவாரம் - சூழ்ந்திருக்கும் சனங்கள்.
பரிவேடம் - சந்திர சூரியரைச் சூழத்தோன்றும் வட்டம்.
பரிமளம் - மிகுமணம்.
பரிவு - அன்பு ; துயர்.
பருவம் - காலம்.
பலகணி - காற்றுப் போகும் வாயில்.
பழி - குற்றம்.
பறித்தல் - கொய்தல்.
பன்னசாலை - முனிவர் வாசம்.
பாணம் - அம்பு.
பாதகம் - குற்றம்.
பாதுகை - மிதியடி.
பாம்புரி - பாம்புச்சட்டை.
பாயசம் - பாற்சோறு.
பாரசீகம் - இந்தியாவுக்கு மேற்கேயுள்ள ஒரு மகமதிய ராச்சியம் (Persia.)
பாராட்டல் - மெச்சுதல்.
பிடி - பெண்யானை.
பிண்டம் - பிதிரர்களுக்குக் கொடுக்கும் அன்னதிரள்.
பிரசைகள் - சனங்கள்.
பிரதாபம் - கீர்த்தி.
பிரமுகர்-மேன்மக்கள் ; தலைவர்.
பிராணன் - இதயத்தியங்கும் வாயு.
பிரார்த்தித்தல் - வணங்குதல்.
பிளிற்றொலி - ஆரவார ஒலி.
புக்குதல் - உட்செல்லல்.
புங்கவர் - உயர்ந்தவர்; தலைவர்.
புட்பகம் - குபேரன் விமானம்.
புருடார்த்தம் - புருடனுக்கு அமைந்திருக்க வேண்டிய பொருட்கள்.
புருடோத்தமன் - விட்டுணு ; புருடருச்குள் உத்தமன்.
புரோகிதர் - குருமார்.
புலன்கள் - பஞ்சேந்திரியங்கள்.
பெருந்தேவி - அரசன் மனைவி.
பேறு - செல்வம் ; மேல்நிலை.
பொய்கை - வாவி.
பொலிவு - நிறைவு ; அழகு.
பொழில் - சோலை.
பொள்ளென - விரைவாக.
பொறுப்பு - பாரம்.
பொன்றுதல் - அழிதல்.
பௌத்திரன் - புத்திரன்மகன்
மகத்துவம் - மேன்மை.
மகவு - பிள்ளை.
மண்டுதல் - மிக்குச் செல்லல் ; நெருங்குதல்.
மத்தகம் - நெற்றி ; தலை.
மதுரம் - இனிமை ; பிரியம்.
மயன் - அசுரத் தச்சன்.
மாபு - வமிசம்.
மாவுரி - நார்ச்சீலை.
மலயம்-மேற்குக்கட்ட (Western Ghats) மலைத்தொடரில் ஓர் பகுதியாகும் பொதியமலை. அங்கே சந்தனமரங்கள் மிகுதியுமுண்டு.
மாயம் - பொய்.
மித்திரன் - நண்பன்.
முகராகம் - முகநிறம்.
முயலுதல் - முயற்சி செய்தல்.

மூர்ச்சை - மயக்கம்.
மூர்த்தம் - உடம்பு.
மேகலே - மகளிர் இடையில் அணியும் நூன்மாலே.
மேற்கதி - மோட்சம்.
மொள்ளுதல் - அள்ளுதல்.
மோகித்தல் - ஆசைகொள்ளல்; விரும்புதல்.
யாகாதிபதி . இந்திரன்.
யோகம் - தியானம்.
வங்கம் - வங்காளதேசம் (Bengal)
வசந்தம் - இளவேனிற்காலம் (சித்திரை, வைகாசி.)
வசீகரித்தல் - கவருதல்.
வதம் - வார்த்தை.
வந்தனே - வழிபாடு.
வம்பு - வீண்.
வரலாறு - சம்பவம் வருதலின் வழி.
வலத்தல் - சூழுதல்; கட்டல்.
வழுவுறுதல் - கேடடைதல்.
வாகுவலேயம் - தோளணி.
வாதை - துன்பம்.
வாளாமை - கேளாமை; மௌனம்.
விசிட்டம் - சிறப்பு; தகுதி.
வித்தாரமாய் - விரிவாய்.
விவரீதம் - வேறுபாடு.
விமானம்-தேர்;தேவரின் ஊர்தி
விருந்தோம்பல் - விருந்தாகவந்தோரைப் பேணல்.
வெருவுதல் - அஞ்சுதல்.
வேடம் - உடை முதலியவற்றால் வேறுவடிவாவது.
வேத்தவை - அரசசபை.
வேதாந்தம் - வேதத்துக்கு உறுப்பாயுள்ள நூல்கள்.
வேள் - மன்மதன்.
வைரம் - நெடுங்கோபம்.

# வமிச ஆவலி

விவச்சுவான்.
|
வைவசுதன்.
|
திலீபன்.
|
இரகு.
|
அயன்.
|
தசரதன்.

- தசரதன்.
  - இராமன்.
    - குசன்.
      - அதிதி.
        - நிடதன்.
          - நளன்.
            - நபசன்.
              - புண்டரீகன்
                - சேமதன்னுவான்.
                  - தேவாநீகன்
                    - அகீநகு.
                      - பாரியாத்திரன்.
                        - சீலன்.
                          - உன்னபன்.
                            - வச்சிரநாபன்.
                              - சங்கணன்.
                                - வியூஷிதாசுவன்.
                                  - விசுவசகன்.
                                    - இரணியநாபன்.
                                      - கௌசல்லியன்.
                                        - பிரமிட்டன்.
                                          - புத்திரன்.
                                            - புஷ்யன்.
                                              - துருவாசந்தி.
                                                - சுதர்சனன்.
                                                  - அக்கினிவருணன்.
    - இலவன்.
  - பரதன்.
    - தக்கன்.
    - புட்கலன்.
  - இலக்குமணன்.
    - அங்கதன்.
    - சந்திரகேது.
  - சத்துருக்கன்.
    - வெகுசுருதன்.
    - சுவாகு.

# ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் பதிப்பு

| | | | ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | தமிழ்ப் புலவர் சரித்திரம் | ... | 2-00 |
| 2. | தண்டியலங்காரம் | .... ... | 2-75 |
| 3. | யாப்பருங்கலக்காரிகை | ... ... | 2-50 |
| 4. | அகப்பொருள் விளக்கம் | ... | 2-25 |
| 5. | இலக்கியச் சொல்லகராதி (அச்சில்) | | |
| 6. | மேகதூதக்காரிகை | ... ... | 60 |
| 7. | கலைசைச்சிலேடை வெண்பா | ... | 25 |
| 8. | இராமோதந்தம்—உரையுடன் | ... | 60 |
| 9. | சிசுபாலசரிதம் | ... .... | 1-00 |
| 10. | இதோபதேசம் (அச்சில்) | | |
| 11. | சாணக்கிய நீதிவெண்பா | ... ... | 20 |
| 12. | வினைப்பகுபத விளக்கம் | ... ... | 50 |
| 13. | கண்ணகிகதை | ... ... | 10 |


**தனலக்குமி புத்தகசாலை,**

**சுன்னாகம்.**

சுன்னாகம்
திருமகள் அழுத்தகம்

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD